




ISSN: 2582–5518

# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








செவ்வாய் ❖ ஆகஸ்ட். 15, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 312 ❖ ரூ.10


மாணவர்களுக்கு எந்தச் சூழலிலும் உயிரை மாய்த்துக் கொள்ளும் சிந்தனை வேண்டாம்

# அறிவுரை

## ஆளுநர் ஆர்.என்.ரவி புரிந்து கொள்ள மறுக்கிறார். பயிற்சி நிறுவங்களின் கைப்பாவையாக அவர் செயல்படுகிறாரோ சந்தேகம் வருகிறது: முதல்வர் ஸ்டாலின்



சென்னை, ஆக. 15–

நீட் தேர்வு தோல்வியால் சென்னை குரோம்பேட்டையைச் சேர்ந்த மாணவர் தற்கொலை செய்து கொண்ட நிலையில் அவரது தந்தையும் துக்கம் தாளாமல் தற்கொலை செய்து கொண்டார். இந்தச் சூழலில் மாணவர்கள் உயிரை மாய்த்துக் கொள்ளும் சிந்தனைக்குள் செல்ல வேண்டாம். தன்னம்பிக்கையுடன் எதையும் எதிர்கொள்ள வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிவுரை வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில், "நீட் தேர்வு மையத்தில் பயின்றுவந்த குரோம்பேட்டையைச் சேர்ந்த மாணவர் ஜெகதீஸ்வரன் தற்கொலை செய்து கொண்டு உயிரை மாய்த்துள்ளதை அறிந்து அதிர்ச்சி அடைந்தேன். அவரது குடும்பத்துக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்று நினைத்துக் கொண்டிருந்த நிலையில், ஜெகதீஸ்வரனின் தந்தை செல்வசேகரும் மறுநாளில் தற்கொலை செய்து கொண்டுள்ளார். ஜெகதீஸ்வரன் குடும்பத்துக்கும், உறவினர்க்கும், நண்பர்களுக்கும் என்ன சொல்லி ஆறுதல் கூறுவது எனத் தெரியவில்லை.

நன்றாகப் படிக்கும் மகன், மருத்துவர் ஆவான் என்று தான் அவரைப் பெற்ற பெற்றோர் நினைத்திருப்பார்கள். ஆனால் நீட் தேர்வு எனும் பலிபீடத்தில் பலியானவர்கள் பட்டியலில் ஜெகதீஸ்வரன் சேர்ந்துவிட்டது மிகக் கொடூரமான நிகழ்வாகும்.

எந்தச் சூழலிலும் உயிரை மாய்த்துக் கொள்ளும் முடிவை எந்த மாணவரும், எப்போதும் எடுக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். உங்கள் உயர்வுக்குத் தடைக்கல்லாக இருக்கும் நீட் தேர்வு முறையை நிச்சயம் நீக்க முடியும். அதற்கான சட்ட ரீதியான முயற்சியில்தான் தமிழ்நாடு அரசு தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது.

ஒரு முறையல்ல, இரண்டு முறை நீட் விலக்கு மசோதாவை நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி வைத்தோம். முதலில் அனுப்பி வைக்கும் போது காலம் கடத்தினார். பல்வேறு நெருக்கடிக்கு மத்தியில் திருப்பி அனுப்பினார். மீண்டும் சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பினோம். இரண்டாவது முறை அனுப்பிவைத்தால் ஒப்புதல் தந்தாக வேண்டும். ஆனால் அதனை அவர் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளார். எங்காவது போய் அந்த மசோதா கிடப்பில் போடப்பட வேண்டும் என்பது தான் ஆளுநர் ரவியின் மோசமான எண்ணம் ஆகும்.

நீட் தேர்வு என்பது தனியார் பயிற்சி நிறுவனங்களில் லட்சக்கணக்கில் பணம் கட்டிப் படித்தால் வெற்றி பெறக் கூடிய தேர்வு முறையாக இருக்கிறது. அப்படி பணம் கட்டி படிக்க முடியாதவர்கள் தோற்றுப் போகிறார்கள். பணம் கட்டி இரண்டு மூன்று ஆண்டுகள் படிக்க பணம் வைத்திருப்பவர்களால் வெற்றி பெற முடிகிறது. குறைவான மதிப்பெண் எடுத்து நீட் தேர்வில் வெற்றி என்ற தகுதியைப் பெற்று விட்டவர்களும், பணம் வைத்திருந்தால் மருத்துவக் கல்லூரியில் சேர முடியும் என்ற நிலைமை உள்ளது. இதை வைத்துப் பார்க்கும் போது பணம் படைத்தவர்களுக்கே மருத்துவக் கல்வி என்ற நிலைமையை உருவாக்கி விட்டார்கள்.

அதை மீறி இதனுள் நுழையும் ஏழை எளிய - அரசு பள்ளி மாணவர்கள் தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டால் சேர்பவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் இது எதுவும் ஆளுநர் ஆர்.என்.ரவிக்குத் தெரியவில்லை. புரிந்து கொள்ள மறுக்கிறார். அல்லது பயிற்சி நிறுவங்களின் கைப்பாவையாக அவர் செயல்படுகிறாரோ என்ற சந்தேகம் வருகிறது.

ஆன்லைன் சூதாட்ட மசோதாவுக்குக் கையெழுத்து போடாமல் இருந்த நேரத்தில் அந்த நிறுவனத்தைச் சேர்ந்தவர்களையே சந்தித்தார். இப்போது ஆளுநர் மாளிகையில் உட்கார்ந்து கொண்டு நாள்தோறும் மாணவர்களை வரவழைத்து கோச்சிங் செண்டரைப் போல பாடம் நடத்திக் கொண்டு இருக்கிறார்.

அவரிடம் நேருக்கு நேராகவே சேலம் மாணவி ஒருவரின் தந்தை கேள்வி கேட்டார். அதற்கு ஆளுநரால் பதிலளிக்க முடியவில்லை. 'நீட் விலக்கு மசோதாவுக்கு நான் கையெழுத்துப்போட மாட்டேன்' என்று ஆளுநர் சொல்லி இருப்பதைப் பார்த்தால் அவரது அறியாமைதான் தெரிகிறது. அவரது கையெழுத்துக்காக இந்த மசோதா காத்திருக்கவில்லை. அது குடியரசுத் தலைவரிடம் தான் நிற்கிறது. இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் அவருக்கு எந்த அதிகாரமும் இல்லை. ஏதோ அதிகாரம் இருப்பதைப் போல அவர் காற்றில் கம்பு சுற்றிக் கொண்டு இருக்கிறார்.

ஜெகதீஸ்வரன் போன்ற எத்தனை உயிர்கள் பலியானாலும் ஆளுநர் ஆர்.என்.ரவி போன்றவர்களின் இதயம் கரையப் போவதில்லை. இப்படிப்பட்ட கல்மனசுக்காரர்களின் காலத்தில் மனித உயிர்களுக்கு மதிப்பு இல்லை.

இன்னும் சில மாதங்களில் நாங்கள் ஏற்படுத்த நினைக்கும் அரசியல் மாற்றம் நடக்கும் போது நீட் தடுப்புச் சுவர் பொலபொலவென உதிர்ந்து விழும். 'கையெழுத்து போடமாட்டேன்' என்பவர்கள் எல்லாம் காணாமல் போய்விடுவார்கள்.

மாணவன் ஜெகதீஸ்வரன், அவரது தந்தை செல்வசேகர் ஆகிய இருவரது மறைவுக்கும் எனது ஆழமான அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவர்களது மரணமே, நீட் பலிபீடத்தின் இறுதி மரணமாக இருக்கட்டும்.

அறிவுமிகு மாணவக் கண்மணிகளே, உங்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் காத்திருக்கிறது. தன்னம்பிக்கை கொள்ளுங்கள். வாழ்ந்து காட்டுங்கள். பிறரையும் வாழ வையுங்கள். உயிரை மாய்த்துக் கொள்ளும் சிந்தனை வேண்டாம் என்று மீண்டும் மீண்டும் உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்" என்று கூறியுள்ளார்.

### குடியரசுத் தலைவருக்கு முதல்வர் கடிதம்

'தமிழக சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பிய நீட் விலக்கு மசோதா, தமிழக மக்களின் ஒட்டுமொத்த கருத்தின் பிரதிபலிப்பு. அதனைச் செயல்படுத்துவதில் ஏற்படும் ஒவ்வொரு நாள் தாமதமும், தகுதியான மாணவர்களுக்கு மருத்துவ சேர்க்கை கிடைப்பதில் பாதிப்புகளை ஏற்படுத்துவதோடு மட்டுமல்ல, சமுதாயத்தில் விலைமதிப்பற்ற மனித உயிரிழப்புகள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைகிறது, எனவே நீட் விலக்கு மசோதாவுக்கு உடனடியாக ஒப்புதல் அளிக்க வேண்டும்' என்று கோரி குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

### வாழ்த்து & அறிவிப்பு

இந்தியர்கள் அனைவருக்கும் சுதந்திர இந்தியாவின் நல்வாழ்த்துக்கள். இன்று புதுகை வரலாறு அலுவலகத்திற்கு விடுமுறை எமது அடுத்த இதழ் ஆகஸ்ட் 17ஆம் தேதியிலிருந்து (வியாழக்கிழமை) வெளிவரும்

நிர்வாகி



▶ தமிழ்நாடு முதலமைச்சர் சென்னையிலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக, இந்து சமய அறநிலையத்துறை சார்பில், பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள். அதனைத்தொடர்ந்து புதுக்கோட்டை மாவட்டம், நார்த்தாமலையில், அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலுக்கு திருமண மண்டபம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டிய நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, பங்கேற்றார். உடன் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, குன்றாண்டார்கோவில் ஒன்றியக் குழுத் தலைவர் பாண்டிசெல்வி கே.ஆர்.என்.போஸ், உதவி ஆணையர் (இந்து சமய அறநிலையத்துறை) அனிதா, செயல் அலுவலர் எஸ்.முத்துராமன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

## வானிலை முன்னறிவிப்பு : தமிழகத்தில் 6 நாட்களுக்கு பரவலாக மழை வாய்ப்பு

சென்னை , ஆக. 15–

தமிழகத்தில் 6 நாட்களுக்கு இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட தகவல்: தமிழக பகுதிகளின் மேல் நிலவும் வளி மண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, இன்று, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஆக.16 ஆம் தேதி முதல் ஆக.20 ஆம் தேதி வரை, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னையைப் பொறுத்தவரை, அடுத்த 48 மணி நேரத்துக்கு, வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 36 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 25-26 டிகிரி செல்சியஸ் என்ற அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

மீனவர்களுக்கான எச்சரிக்கை: ஆக.15ம் தேதி, தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். மேற்குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப் படுகிறார்கள் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## "திமுக அளித்தது பொய் வாக்குறுதி நீட் தேர்வை வைத்து விளையாடாதீர்கள்" தமிழிசை ஆவேசம்

புதுச்சேரி , ஆக. 15–

"எப்போதும் நீட் தேர்வில் எதிர்மறை கருத்துக்களை மட்டும் பரப்பாதீர்கள். நீட் தேர்வில் பலர் வெற்றி பெற்று மருத்துவர்களாக வருகின்றனர். இது மிகப் பெரிய புரட்சியை ஏற்படுத்தி வருகின்றது" என்று ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.



புதுச்சேரி தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா நேற்று நடைபெற்றது. இதில் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். விழாவுக்கு பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "இந்திய நாட்டின் 77-வது சுதந்திர தின விழாவை நாளை கொண்டாட இருக்கின்றோம். அனைவருக்கும் எனது உளம் கனிந்த சுதந்திர தின வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். பிரதமர் சொன்னது போல டிவிட்டர் முகப்பில் நாம் தேசியக் கொடியை வைப்போம். ஒவ்வொரு வீட்டிலும் தேசியக் கொடியை ஏற்றுவோம். நமது தேசப்பற்றை சொல்லும் நிலையில் இருக்கின்றோம். பலரின் தியாகங்களால் இதை பெற்றிருக்கிறோம்.

எல்லா வகையிலும் புதுச்சேரி பல முன்னேற்றங்களை பெற்று வேகமாக வளர்ந்து வருகிறது. எப்படி பொருளாதாரத்தில் வளர்ந்த நாடாக இந்தியா ஆகப்போகிறதோ, அதேபோல் பொருளாதாரத்திலும், வாழ்வாதாரத்திலும், சுகாதாரத்திலும் புதுச்சேரியும் முன்னேறிய மாநிலமாக மாறுவதற்கு அத்தனை முயற்சிளும் மேற்கொள்ளப்படுகிறது.

அரசாங்கத்தில் நடைபெற வேண்டிய விழாக்கள் சிறப்பாக நட்புணர்வோடு நடைபெற வேண்டும். தெலங்கானாவில் நான் கூடும் விழாக்களுக்கு முதல்வர் வருவதில்லை. ஆனால் அதனை கவலையோடுதான் நான் எதிர்கொள்கிறேன். கருத்து மோதல்கள், கருத்து பரிமாற்றங்கள் இருக்கலாம். ஒருவர் கருத்தை ஒருவர் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பது இல்லை. ஒப்புக்கொள்ள வேண்டிய கருத்தைத்தான் ஒருவர் சொல்ல வேண்டும் என்பதும் இல்லை. ஆனால், நாம் இப்படி ஒவ்வொரு விழாவிலும் கலந்து கொள்ளவில்லை, ஒரு நட்புணர்வை நாம் மேற்கொள்ளவில்லை என்றால் எதிர்வரும் இளைய சமுதாயத்துக்கு எதைச் சொல்ல வருகின்றோம் என்ற ஆழ்ந்த கவலை எனக்கு இருக்கிறது. என்னை பொறுத்தவரையில் எவ்வளவு மாற்றுக் கருத்து இருந்தாலும், அரசின் விழாவின் வழிமுறை என்று வரும்போது அதனை பின்பற்றுவது தான் சரியாதாக இருக்கும்.

நீட் தேர்வை முதலில் இருந்தே நான் ஆதரித்தேன். புதுச்சேரியில் சாதாரண மாணவர்கள் பலர் என்னை வந்து சந்தித்து நீட் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளேன் என்று சொன்னார்கள். ஆனால், நீட் தேர்வை வைத்து அரசியல் செய்கிறார்கள் என்பது எனக்கு மிகுந்த கவலையாக இருக்கிறது. தமிழகத்தில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் முதலில் நீட் தேர்வை விலக்குவோம் என்று சொன்னார்கள். நீட் தேர்வை விலக்க முடியாது என்று தெரிந்தே பொய் வாக்குறுதியைத்தானே கொடுத்தார்கள். மாணவர்களை படிக்க விடாமல் ஏமாற்றியது யார்? நீட் தேர்வில் விளக்கு அளிக்க முடியாது என்பது உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு. ஏன் இதுதொடர்பாக வழக்காடு மன்றம் செல்ல மறுக்கின்றனர். ஆகவே நீட் தேர்வை வைத்து எல்லோரும் விளையாட வேண்டாம். மாணவர்களை படிக்க விடுங்கள். எப்போதும் நீட் தேர்வில் எதிர்மறை கருத்துகளை மட்டும் பரப்பாதீர்கள்.

இன்று பலர் நீட் தேர்வில் வெற்றி பெற்று மருத்துவர்களாக வருகின்றனர். இது மிகப் பெரிய புரட்சியை ஏற்படுத்தி வருகிறது. மருத்துவக் கல்லூரி வைத்திருக்கும் மிகப்பெரிய செல்வந்தரின் பிள்ளைகள் கூட நீட் தேர்வில் வெற்றிபெறவில்லை என்றால் மருத்துவக் கல்லூரியில் சேர்க்க முடியாது. எப்போதும் ஆரம்பிக்கும்போது சில ஏற்றத்தாழ்வுகள் இருக்கும். எல்லாவற்றுக்கும் நுழைவுத் தேர்வுகள் வந்துவிட்டது. இந்தியா முழுவதும் பல பதவிகள், உயர்கல்வி பெற வேண்டும் என்றால் 83 வகையான நுழைவுத் தேர்வுகளை ஒரு குழந்தை எழுதுகிறது. அப்படி இருக்கும்போது மருத்துவக் கல்லூரிக்கும் ஒரு நுழைவுத் தேர்வு தேவைதான்.

இன்றைய சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டும் என்றால் ஐஏஎஸ், ஐபிஎஸ் தேர்வுகளுக்கு எழுதுவது போன்று, மருத்துவத்துக்கும் நுழைவுத் தேர்வு அவசியம். இன்று மாணவர்கள் வெற்றி பெற ஆரம்பித்துவிட்டார்கள். தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் தான் அதிகமாக வெற்றி பெருகின்றனர். தயவு செய்து மாணவர்களின் தன்னம்பிக்கையை குலைத்து விடாதீர்கள்.

மறைந்த முதல்வர் ஜெயலலிதா சட்டப்பேரவையில் தாக்கப்பட்டார் என்பது உண்மையான சரித்திரம், வரலாறு'' என்று அவர் கூறினார்.



▶ புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், நீரில் மூழ்கி இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து, நிவாரண உதவித்தொகைக்கான உதவித்தொகைக்கான காசோலையினை, மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யாவழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) செய்யது முகம்மது, மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# அரியலூர் பகுதியில் பெயர் பலகைகளை திருடும் மர்ம கும்பல் நெடுஞ்சாலை துறையினர் அதிர்ச்சி

அரியலூர், ஆக15–

அரியலூர் மாவட்டத்திற்கு உட்பட்ட திருமானூர்-புள்ளம்பாடி, முடிகொண்டான்-கல்லக்குடி, கீழ காவட்டாங்குறிச்சி-கீழப்பழுவூர், திருமானூர்-ஏலாக்குறிச்சி ஆகிய சாலைகளில் வைக்கப்பட்ட ஊர் பெயர் பலகைகள், எச்சரிக்கை பலகைகள் சமீபத்தில் திருட்டுப் போனது. இதேபோன்று கிராம சாலைகளில் வைக்கப்பட்ட சிறிய எச்சரிக்கை பலகைகளும் காணாமல் போயின ஆகவே அந்த இடங்களில் பலகை இல்லாமல் சட்டங்களாக அவை காட்சியளிக்கின்றன. இதனால் வெளியூர்களில் இருந்து வரும் வாகன ஓட்டிகள் வழி தெரியாமல் தடுமாறும் நிலை ஏற்படுகிறது. இந்த எச்சரிக்கை மற்றும் பெயர் பலகைகள்



அலுமினியத்தால் ஆனவை. இதனை மர்மநபர்கள் குறிவைத்து திருடிச் செல்வது நெடுஞ்சாலை துறை மற்றும் கிராம பஞ்சாயத்துகளுக்கு தலைவலியை ஏற்படுத்தி உள்ளது.

இதுகுறித்து காவல் நிலையங்களில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் திருடர்கள் சிக்கவில்லை. தொடக்கத்தில் அந்த பெயர் பலகைகள் காணாமல் போனபோது காற்றில் விழுந்திருக்கலாம் என கருதப்பட்டது. ஆனால் பல்வேறு இடங்களில் மாயமானதால் இது திட்டமிட்ட திருட்டு என்பது உறுதி செய்யப்பட்டது. பெரும்பாலும் மக்கள் நடமாட்டம் அதிகம் இல்லாத, சி.சி.டி.வி. கேமரா வசதி இல்லாத ஊருக்கு ஒதுக்குப்புறமான இடங்களில் இந்த பலகைகள் திருடப்பட்டுள்ளது. மதுபோதை ஆசாமிகள் இது போன்ற திருட்டுகளில் ஈடுபடலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இந்த வகை திருட்டு புதுவிதமாக இருப்பதாக காவல்துறையினரும் நெடுஞ்சாலை துறையினரும் தெரிவித்தனர். வெளியூர்களில் இருந்து வரும் வாகன ஓட்டிகளுக்கு வழிகாட்டுவதற்காக வைக்கப்படும் பெயர் பலகை மற்றும் எச்சரிக்கை பலகைகளை திருடி செல்வது அதிர்ச்சியை அளிப்பதாக அமைந்துள்ளது.

# வன்முறை நடந்த ஹரியாணாவில் மீண்டும் ஜலாபிஷேக யாத்திரை

புதுடெல்லி, ஆக15–

ஹரியாணாவின் நூ மாவட்டத் தில், விஸ்வ இந்து பரிஷத் சார்பில் கடந்த மாதம் பிரிஜ் மண்டல் ஜலாபிஷேக யாத்திரை நடந்தது. நூ மாவட்டத்தில் யாத்திரை நடந்தபோது, ஒரு கும்பல், யாத்திரையில் பங்கேற்றவர்கள் மீது தாக்குதல் நடத்தியது. இதனால் இருதரப்பினர் இடையே ஏற்பட்ட வன்முறையில் 6 பேர் உயிரிழந்தனர். தற்போது அங்கு வன்முறை கட்டுபடுத்தப்பட்டுள்ளது.



இந்நிலையில், 'சர்வ இந்து சமாஜ்' என்ற பெயரில் மகாபஞ்சாயத்து கூட்டம் நேற்று நடந்தது. இந்த கூட்டத்தில் பிரிஜ் மண்டல் ஜலாபிஷேக யாத்திரையை அரசு அனுமதியுடன் அல்லது அனுமதியில்லாமல் வரும் 28–ம் தேதி முதல் தொடர முடிவு செய்யப்பட்டது.




### திருமுருகன்பூண்டி அருகே

# வழிப்பறி வழக்கில் 3 பேர் குண்டர் சட்டத்தில் கைது

திருப்பூர், ஆக15–

திருமுருகன்பூண்டி அருகே வழிப்பறி வழக்கில் கைதான 3 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர். இது குறித்து திருப்பூர் மாநகரக் காவல் ஆணையர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:- திருமுருகன்பூண்டி காவல் நிலையஎல்லைக்குட்பட்ட ஏவிஎஸ்கார்டன் பகுதியில் திவாகரன் என்பவர் கடந்த ஜூன் 30 ந் தேதி நடந்து சென்றுள்ளார். அப்போது, அந்த வழியாக வந்த 3 பேர் அவரைத் தடுத்து நிறுத்தி செல்போனை பறித்து கொண்டு தப்பிச் சென்றனர்.

இது குறித்து திருமுருகன்பூண்டி காவல் நிலையத்தில் திவாகரன் அளித்த புகாரின்பேரில் வழக்குப் பதிவு செய்த போலீசார், ராயபுரத்தைச் சேர்ந்த எபின் (19), சாமுண்டிபுரத்தை சேர்ந்த தமிழ்செல்வன் (20), பவானி சாகரை சேர்ந்த விமல்குமார் (20) ஆகிய 3 பேரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜாபடுத்தி சிறையில் அடைத்தனர். இந்த 3 பேரும் பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்ததால் அவர்களை குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் ஒரு ஆண்டு சிறையில் அடைக்க மாநகர காவல் ஆணையர் பிரவீன்குமார் அபிநபு உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவுக்கான நகலை கோவை சிறையில் அடைக்கப்பட்டுள்ள 3 பேரிடமும் திருமுருகன்பூண்டி காவல்துறையினர் இரவு வழங்கினர். திருப்பூர் மாநகரில் நிகழாண்டு தொடர்குற்றச்சம்பவங்களில் ஈடுபட்டதாக 42 பேர் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோவை வஉசி மைதானம் சாலையில் உருவாகிறது 'உணவக வீதி' மாநகராட்சி சூப்பர் ஏற்பாடு

கோவை, ஆக15–

கோவை வஉசி மைதானம் சாலையில், உணவக வீதி (ஃபுட் ஸ்ட்ரீட்) அமைக்கப்பட உள்ளது. இதற்கான அடிப்படை கட்டமைப்புகளை மாநகராட்சி நிர்வாகத்தினர் ஏற்படுத்த உள்ளனர்.

கோவை மாநகரில் உள்ள முக்கிய பொழுது போக்கு மையங்களில், வஉசி பூங்கா பகுதி முக்கியமானதாகும். இப்பகுதியில் வஉசி மைதானம், சிறுவர் பூங்கா, தாவரவியல் பூங்கா, உயிரியல் பூங்கா உள்ளிட்ட பல்வேறு பொழுதுபோக்கு கட்டமைப்புகள் உள்ளன. தினமும் ஏராளமானோர் இங்கு வந்து செல்கின்றனர். குறிப்பாக, வார இறுதி நாட்களில் ஆயிரக் கணக்கான மக்கள் வந்து செல்கின்றனர்.

இப்பகுதியில் சாலையோரங்களில் ஏராளமான உணவகங்கள், காளான் விற்பனைக் கடைகள் உள்ளன. இந்நிலையில், மத்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் சார்பில், தமிழகத்தில் மக்கள்



அதிகம் கூடும் பகுதிகளில் 'ஃபுட் ஸ்ட்ரீட்' அமைக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கான இடத்தை தேர்வு செய்து, கருத்துரு சமர்ப்பிக்கும் படியும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

அதன்படி, கோவை மாநகராட்சி நிர்வாகத்தின் சார்பில் வஉசி மைதானம் சாலை தேர்வு செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. இதற்கு அரசு ஒப்புதல் அளித்தது. இதைத் தொடர்ந்து, உணவக வீதி அமைய உள்ள வஉசி மைதானம் சாலையை மாநகராட்சி ஆணையர் மு.பிரதாப் மற்றும் அதிகாரிகள் குழுவினர் நேற்று முன்தினம் நேரில் ஆய்வு செய்தனர்.

மாநகராட்சி அதிகாரிகள் கூறும்போது, ''வஉசி மைதானம் சாலையில் ரூ.1 கோடி மதிப்பில் உணவக வீதிக்கான அனைத்து கட்டமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படும். பாதசாரிகள் எளிதாக பயன்படுத்தும் வகையில் இந்த 'ஃபுட் ஸ்ட்ரீட்' அமைக்கப்பட உள்ளது. இங்கு உணவு விற்பனைக் கடைகள் முறைப்படுத்தப்படும். உணவுக் கழிவுகள், குப்பை கழிவுகள் முறையாக சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இங்கு வரும் பொது மக்களுக்கு தேவையான குடிநீர் வசதி, கழிப்பிட வசதி உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்,'' என்றனர்.

# அவார்டு தொண்டு நிறுவனம் சார்பில் மூன்று பள்ளிகளை சேர்ந்த 200 மாணவர்களுக்கு காலணிகள் வழங்கும் நிகழ்ச்சி





ஊத்துக்கோட்டை, ஆக15–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், கன்னிகைப்பேர் ஊராட்சியில் அவார்டு தொண்டு நிறுவனம் ஒன்று இயங்கி வருகிறது. இந்தத் தொண்டு நிறுவனம் சார்பில் சுதந்திர தின விழாவை கொண்டாடும் வகையில் பள்ளி மாணவர்களுக்கு காலணிகள் வழங்க முடிவு செய்தனர்.

எனவே, கன்னிகைப்பேர் ஊராட்சியைச் சேர்ந்த சி.எஸ்.ஐ துவக்கப்பள்ளி, ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, கிருஷ்ணாபுரம் கண்டிகை கிராமத்தில் இயங்கி வரும் ஊராட்சிஒன்றியதுவக்கப்பள்ளி என மூன்று பள்ளியைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கு காலணிகள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று அந்தந்த பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளுக்கு இத்தொண்டு நிறுவனத்தின் இயக்குனர் கல்யாணி தலைமை தாங்கினார். தொழிலதிபர் செங்குன்றம் பாலசுப்பிரமணியம் முன்னிலை வகித்தார்.

இத்தொண்டு நிறுவனத்தின் தலைவர் மேரி ஜெஸினா வாழ்த்தி பேசினார். இதில், சிறப்பு அழைப்பாளராக முன்னாள் பள்ளி மாணவர் ஜெ.ஜெ.ஹென்றி கலந்து கொண்டு மாணவர்களுக்கு காலணிகளை வழங்கிசிறப்புரை ஆற்றி பேசினார். முன்னதாக அனைவரையும் பள்ளியின் தலைமை ஆசிரியர்கள் எஸ்.வெற்றிச்செல்வன், ஆர்.உதயகுமார், ரம்யா ஆகியோர் வரவேற்றனர். முடிவில், தன்னார்வலர் செல்வம் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# சுதந்திர தினம் வட சென்னை இணை ஆணையருக்கு முதல்வர் பதக்கம்

சென்னை, ஆக, 15

சென்னை-போதை பொருள் கடத்தலுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுத்த, சென்னை வடக்கு மண்டல கூடுதல் கமிஷனர் அஸ்ரா கார்க் உள்ளிட்ட போலீஸ் அதிகாரிகள் ஆறு பேருக்கு, முதல்வரின் காவல் பதக்கம் அறிவிக்கப்பட்டு உள்ளது.

சட்டசபையில், காவல் மானிய கோரிக்கையின் போது, சமூகத்தில்



போதை பொருள் ஒழிப்புக்கு கடுமையாகவும், நேர்மையாகவும் நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகள் மற்றும் போலீசாரை ஊக்கப்படுத்த, முதல்வர் காவல் பதக்கம் வழங்கப்படும் என, முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார்.

அதன்படி, போலீஸ் அதிகாரிகள் ஆறு பேருக்கு, இந்தாண்டுக்கான விருது அறிவிக்கப்பட்டு உள்ளது. இவர்களுக்கு, கோட்டையில் இன்று நடக்கும் சுதந்திர தின விழாவில், முதல்வர் ஸ்டாலின் பதக்கம் அணிவிக்க உள்ளார்.

# நீட் பிரச்சினை எதிரொலி "ஆளுநர் மாளிகை தேநீர் விருந்தை புறக்கணிக்கிறோம்" முதல்வர் ஸ்டாலின் அதிரடி

சென்னை, ஆக15–

"நீட் விவகாரத்தில் தமிழக மாணவர்களின் எதிர்காலத்தைச் சிதைக்கும் வகையில் பேசி வரும் ஆளுநர் ஆர்.என்.ரவியைக் வன்மையாகக் கண்டிக்கும் அடையாளமாக ஆகஸ்ட் 15 அன்று, ஆளுநர் மாளிகையில், அவர் ஏற்பாடு செய்திருக்கும் தேநீர் விருந்தினைப் புறக்கணிக்க முடிவு செய்துள்ளோம்" என்று முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில், "குமரிக் கடல் முதல் இமயப் பெருமலை வரை வாழும் மக்கள் ஒன்றுபட்ட சிந்தனையுடன் போராடிப் பெற்றதே இந்திய நாட்டின் விடுதலை ஆகும். அப்போது வாழ்ந்த முப்பது கோடி மக்களும் நாட்டு விடுதலைக்காகப் போராடியதன் விளைவே 1947 ஆகஸ்ட் 15 அன்று கிடைத்த வெற்றிச் செய்தி. இன்று, நாம் இந்தியத் திருநாட்டின் 77-ஆவது விடுதலை நாளைக் கொண்டாடுகிறோம் என்றால், இதற்காகத் தியாகம் செய்த அனைவரது போராட்டத்துக்கும் தலைவணக்கம் செலுத்தவே. போராடிப்பெற்ற விடுதலையை எந்நாளும், எச்சூழலிலும் போற்றிப் பாதுகாப்பதே அவர்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலி ஆகும்.

விடுதலை அடைவதற்கு முன்பே, 'ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம்' என்று அனைவரையும் பாடச் சொன்னார் மகாகவி பாரதியார். விடுதலை பெற்ற இந்தியாவானது, அனைவருக்கும் சமவாய்ப்பு அளிக்கும் இந்தியாவாகத்தான் இருக்கும் என்று அந்தத் தமிழ்க்கவி கனவு கண்டார். நாட்டின் 77 ஆவது விடுதலை நாளைக் கொண்டாடும் நேரத்தில், சில நாட்களுக்கு முன் சென்னையைச் சேர்ந்த 17 வயது மாணவர் ஜெகதீஸ்வரன் மற்றும் அவரது தந்தை செல்வசேகர் ஆகிய இருவரும் தங்கள் உயிரை மாய்த்துக்கொண்ட செய்தி, நம் முன்னோர் தம் இன்னுயிர் ஈந்து நமக்களித்த விடுதலை, எல்லோருக்குமானதா அல்லது வசதி படைத்த வெகு சிலருக்கானதா? என்ற கேள்வியை எழுப்புகிறது.

அரியலூர் அனிதாவில் தொடங்கி இதுவரை விலைமதிப்பில்லா பல மாணவச் செல்வங்களின் உயிர்களை, நீட் தேர்வு முறை காரணமாக தமிழ்நாட்டில் நாம் இழந்திருக்கிறோம். இவர்களின் மரணங்கள் எழுப்பும் தார்மிகக் கேள்விகள், நமது மனச்சாட்சியை உலுக்கி வருகிறது.

ஆனால், ஏழை எளிய, நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர்,



அவர்தம் பெற்றோரின் கனவுகளை, எதிர்கால நல்வாய்ப்புகளை இழந்து வரும் நிலையை உணர மறுத்து, தமிழ்நாட்டு ஆளுநர் இரக்கமற்ற வகையில் பேசி வருகிறார். 'நீட் தேர்வு விலக்குக்கு நான் ஒருபோதும் அனுமதி அளிக்க மாட்டேன். அந்த அதிகாரம் எனக்கு இருந்தால் நிச்சயம் நீட் விலக்கு மசோதாவில் கையெழுத்திட மாட்டேன்' என்று பொதுவெளியில் ஆளுநர் ஆர்.என்.ரவி பேசியிருப்பது தமிழக மாணவர்களையும், இளைஞர்களையும் அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. ஏழு ஆண்டுகளாக தமிழகத்தில் நடந்து வரும் நீட் எதிர்ப்புப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில் ஆளுநர் பொறுப்பில் இருப்பவர் பொறுப்பின்றிப் பேசுகிறார்.

தமிழ் மக்களைப் பற்றி அக்கறையுள்ளோர், தமிழர் உயிர் துறப்பதைக் கண்டு கலங்குவர். ஆனால், ஆளுநர் ரவியின் செயல்பாடுகள், 'அதைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை' என்பது போல உள்ளது. இந்த நிலை மாறவே, நீட் தேர்வுக்கு விலக்கு கோரி, சட்டம் இயற்றி, தமிழ்நாடு அரசு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்துள்ளது. குடியரசுத் தலைவர் இதற்கு ஒப்புதல் வழங்கக் கோரி, இன்று (ஆக.14) கடிதம் அனுப்புகிறேன்.

ஆளுநர் அரசியல் ரீதியாக திராவிடம், ஆரியம், திமுக, திருவள்ளுவர், வள்ளலார், சனாதனம் பற்றிப் பேசி வருவதை நாங்கள் மதிக்கவில்லை. அது கபட வேடம் என்பதை அறிந்தே இருக்கிறோம்; ஆரியப் புலம்பலாக ஒதுக்கித் தள்ளுகிறோம். ஆனால், ஏழை எளிய, விளிம்பு நிலை அரசுப் பள்ளி மாணவர்களின் மருத்துவக் கனவை அப்படித்தான் சிதைப்பேன் என்று நியமனப் பதவியில் இருக்கும் ஓர் ஆளுநர் கொக்கரிப்பார் என்றால், இது கல்வித் துறை மீது நடத்தப்படும் சதியாகவே கருதுகிறோம்.

தமிழக மாணவர்களின் எதிர்காலம் எங்களுக்கு முக்கியமானது. நாங்கள் இந்த மாநிலத்திற்கு, இந்த ஆண்டு வந்து, அடுத்த ஆண்டு செல்பவர்கள் அல்ல. ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தமிழ் மக்களுக்காக என்றென்றும் உரிமைக் குரலை எழுப்பும் ஒரே கட்சி திமுகதான்.

பல்கலைக் கழகங்களைச் சிதைத்தும் - உயர் கல்வித் துறையைக் குழப்பியும், தமிழக சட்டமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகள் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு அனுமதி தராமலும், இதன் உச்சமாக தமிழக மாணவர்களை, பெற்றோர்களை, அவர்களது எதிர்காலத்தைச் சிதைக்கும் வகையில் பேசி வரும் ஆளுநரை வன்மையாகக் கண்டிக்கிறேன். இதன் அடையாளமாக ஆகஸ்ட் 15 அன்று, ஆளுநர் மாளிகையில், அவர் ஏற்பாடு செய்திருக்கும் தேநீர் விருந்தினைப் புறக்கணிக்க முடிவு செய்துள்ளோம்" என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

### பஞ்செட்டி அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் திருக்கோவிலில்

# காப்பு கட்டி விரதம் இருந்த 107 பக்தர்கள் தீ மிதித்து தங்களது நேர்த்திக் கடனை செலுத்தினர்

ஊத்துக்கோட்டை, ஆக15–

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், பஞ்செட்டி கிராமத்தில் சுமார் 150 ஆண்டுகள் பழமை வாய்ந்த பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் திருக்கோவில் உள்ளது. சிதிலமடைந்து காணப்பட்ட இக்கோவிலை கிராம மக்கள் மற்றும் விழா குழுவினர் புதிய பொலிவுடன் கட்டி முடித்தனர். இக்கோவிலின் மகா கும்பாபிஷேகம் கடந்த ஜூன் மாதம் 28-ம் தேதி சிறப்பாக நடைபெற்றது. இதன் பின்னர், 48 நாட்கள் மண்டலபிஷேக விழா நடைபெற்றது.

இந்நிலையில், இக்கோவிலில் தீமிதி திருவிழா நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இத்திருவிழாவை முன்னிட்டு கடந்த 3-ம் தேதி வியாழக்கிழமை பந்தகால் முகூர்த்த நிகழ்ச்சியும், 4-ம் தேதி காலை குமார மக்கள் எனப்படும் பக்தர்களுக்கு காப்பு கட்டும் நிகழ்ச்சியும் கோவில் வளாகத்தில் நடைபெற்றது. இதை தொடர்ந்து நாள்தோறும்



பல்வேறு வகையான பூஜைகள் நடைபெற்றது.

நேற்று முன்தினம் காலை கூழ்வார்த்தல் நிகழ்ச்சியும், மதியம் பொங்கல் வைக்கும் நிகழ்ச்சியும் இக்கோவில் வளாகத்தில் நடைபெற்றது. நேற்று முன்தினம் இரவு பொன்னியம்மன் கோவில் அருகே புனித நீராடிய குமார மக்கள் எனப்படும் பக்தர்களை பூக்களாலும், மின்விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட அம்மன் மங்கள வாத்தியம் இசைக்க, வானவேடிக்கையுடன் சென்று ஸ்ரீ மாரியம்மன் கோவிலுக்கு அழைத்து வரும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதன் பின்னர், கோவிலின் எதிரே அமைக்கப்பட்டு இருந்த தீ குண்டத்தில் 107 பக்தர்கள் ஒருவர் பின், ஒருவராக இறங்கி தீ மிதித்து தங்களது நேர்த்தி கடனை செலுத்தினர்.

இதன் பின்னர், கோவில் அருகே அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதைத்தொடர்ந்து பேண்டு-வாதியம், மங்கள வாத்தியம் இசைக்க, வானவேடிக்கையுடன் அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் முக்கிய வீதிகளின் வழியாக திருவீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதன் பின்னர், தெருக்கூத்து நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளில் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் தங்களது குடும்பத்துடன் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கிராம பொதுமக்களும், விழா குழுவினர்களும் சிறப்பாக செய்திருந்தனர்.

# ஆயப்பாடியில் தீவிபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு பூம்புகார் எம்எல்ஏ நிவாரணம்

தரங்கம்பாடி, ஆக-15:

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா திருக்களாச்சேரி ஊராட்சி ஆயப்பாடியில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் நிவாரண உதவிகள் வழங்கினார்.



திருக்களாச்சேரி ஊராட்சி ஆயப்பாடி காளியம்மன் கோவில் தெருவில் வசித்து வருபவர் சரோஜா (65) இவரது கூரை வீடு ஞாயிற்றுக்கிழமை திடீரென தீ பற்றி எரிவதை கண்ட அக்கம் பக்கத்தினர் தீ முழுவதும் பரவாமல் அனைத்து கட்டுக்குள் கொண்டு வந்தனர். தகவல் அறிந்து வந்த பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் நேரில் சென்று சந்தித்து ஆறுதல் கூறி தனது சொந்த நிதியிலிருந்து ரூ.5 ஆயிரம் ரொக்கம், புடவை, போர்வை,பாய்மற்றும்மளிகை பொருட்கள் வழங்கினார். இதேபோல் அரசின் சார்பில் நிவாரணமாக ரூ.5 ஆயிரம், அரிசி மண்ணெண்ணெய் புடவை, வேட்டி நிவாரண பொருட்களை வட்டாட்சியர் சரவணன் வழங்கினார்.

இதில் செம்பை தெற்கு ஒன்றிய செயலாளர் எம். அப்துல் மாலிக், தஞ்சை மண்டல திமுக தகவல் தொழில்நுட்ப அணி பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஊராட்சி மன்ற தலைவர் சம்சாத்ரபிக், திமுக நிர்வாகிகள் முசாகுதீன், ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் அறிவழகன், ஊராட்சி மன்ற தலைவர்கள் கே.பி.ராஜா, பைலட், மாவட்ட பிரதிநிதிகள் கே.எஸ்.எஸ். கருணாநிதி, சடகோபன் மற்றும் திமுக நிர்வாகிகள் கிராம பொதுமக்கள் பலர் உடன் இருந்தனர்.

# சுதந்திர தின விழாவில் தமிழக போலிஸ் அதிகாரிகளுக்கு 8 பேருக்கு மத்திய அரசு விருது

டெல்லி,ஆக,15,

சென்னை - சிறந்த புலன் விசாரணைக்காக, தமிழகத்தைச் சேர்ந்த எட்டு போலீஸ் அதிகாரிகளுக்கு, மத்திய உள்துறை அமைச்சர் விருது அறிவிக்கப்பட்டு உள்ளது.

சென்னை அடையாறு துணை கமிஷனர் பொன்கார்த்திக் குமார், சென்னை மத்திய குற்றப்பிரிவு உதவி கமிஷனர் ஜான் விக்டர், இன்ஸ்பெக்டர்கள் ரம்யா, ரவிக்குமார், விஜயா, வனிதா, சரஸ்வதி, கோபாலகிருஷ்ணன் ஆகியோருக்கு, இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

பொன்கார்த்திக் குமார், 2018ல் சேலம் மாவட்டம், ஆத்தூர் உதவி எஸ்.பி.,யாக பணிபுரிந்த போது, 12 வயது சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில், திறமையாக புலன் விசாரணை செய்து, குற்றவாளிகளுக்கு துாக்கு தண்டனை பெற்றுத் தந்தார் ஜான் விக்டர், 2015ல், சி.பி.சி.ஐ.டி., பிரிவில், கடத்தல் தடுப்பு பிரிவில் இன்ஸ்பெக்டராக பணிபுரிந்தார்.

அப்போது, சென்னை பெரவள்ளூர் காவல் நிலைய எல்லையில், 16 வயது சிறுமி கடத்தப்பட்ட வழக்கில் திறமையாக புலன் விசாரணை செய்து, குற்றவாளிகளுக்கு இரட்டை ஆயுள் தண்டனை பெற்றுத் தந்தார் மற்றவர்களும் பல்வேறு வழக்குகளில் திறமையாக புலன் விசாரணை செய்து, குற்றவாளிகளை கைது செய்து சிறையில் அடைத்துஉள்ளனர்,என்பது குறிப்பிடத்தக்கது

# ஜெ.ஜெ கல்லூரியில் எனது மண் எனது தேசம் மரக் கன்றுகள் நடும் விழா

புதுக்கோட்டை , ஆக.15-

மத்திய' அரசின் கலாச்சார அமைச்சகம், இளையோர் விவகார அமைச்சகம் மற்றும் நேரு யுவ கேந்திரா சங்கதன் ஆகியவை இணைந்து 75வது சுதந்திரப் பெருவிழாவை முன்னிட்டு, மரக்கன்றுகள் நடுதல், நாட்டிற்கு உழைத்த நல்லோரை நினைவு கூறும் வகையில் நினைவுப் பலகைகள் அமைத்தல், தேச நலனுக்கான ஐந்து உறுதிமொழி ஏற்றல் ஆகிய நிகழ்ச்சிகளை "எனது மண் எனது தேசம்" எனும் தலைப்பில் நாடு முழுவதும் உள்ள அனைத்து கிராமங்களிலும் நடத்தி வருகின்றன'



இதன் ஒரு பகுதியாக புதுக்கோட்டை மாவட்ட நேரு யுவ கேந்திரா ஜெ.ஜெ.கலை அறிவியல் கல்லூரியின் இளையோர் செஞ்சிலுவை சங்கம் ஆகியவை இணைந்து மரக்கன்றுகள் நடுதல் மற்றும் உறுதிமொழி ஏற்றல் ஆகிய நிகழ்வுகளை சிவபுரம் கற்பக விநாயகா மெட்ரிக் பள்ளி வளாகத்தில் நடத்தினர். நிகழ்ச்சிக்கு இளையோர் செஞ்சிலுவை சங்க மாவட்ட அமைப்பாளர் முனைவர் கு தயாநிதி அவர்கள் தலைமையேற்றார் ஜெ.ஜெ.கலை அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் கோவிந்தன், உணவக மேலாண்மையியல் துறைத் தலைவர் கார்த்திகேயன் ஆகியோர் மரக்கன்றுகள் நடுதலை துவங்கி வைத்தனர். நிகழ்ச்சியில் 75வது சுதந்திர அமுதப்பெருவிழாவை குறிக்கும் வகையில் 75 மரங்கன்றுகள் நடப்பட்டன.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் நேரு யுவ கேந்திரா திட்ட உதவி அலுவலர் நமச்சிவாயம் உறுதிமொழி வாசிக்க அனைவரும் உறுதிமொழி ஏற்றனர். சமூக சேவகர்கள் பாலமுருகன், கார்த்திகேயன், அசோக் மற்றும் கணேசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கற்பகவிநாயகா நர்சிங் கல்லூரியைச் சார்ந்த சுமார் 75 மாணவிகளும் ஜெ.ஜெ கலை அறிவியல் கல்லூரி இளையோர் செஞ்சிலுவைச் சங்கத்தை சார்ந்த சுமார் 25 மாணவர்களும் என 100 மாணவ மாணவியர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நடவு செய்ததோடு தேச நலன் குறித்த உறுதிமொழி ஏற்றனர். நிறைவாக யுவ கேந்திராவின் தேசிய இளையோர் தொண்டா கருப்பையா நன்றி கூறினார்.



தென்காசி மாவட்டத்திற்கு வருகை புரிந்து அரசு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் ம. சுப்ரமணியன் முன்னாள்திமுக மாவட்ட பொறுப்பாளரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான மா. செல்லத்துரை, தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே. ஜெயபாலன், கடையநல்லூர் திமுக நகரச்செயலாளர் எஸ். அப்பாஸ், மாவட்ட திட்டக் குழு உறுப்பினர் ரா. முருகன், ஒன்றியச் செயலாளர் பா.சுரேஷ், கடையநல்லூர் சேர்மன் மூப்பன் ஹபீபூர் ரகுமான்,திரிகூடபுரம் சுப்பிரமணியம், அருணாசல பாண்டியன், ராஜ், சிட்டி திவான், முருகானந்தம் நல்லையா பிள்ளையார் பாண்டியன் காசி செய்யது மசூது, மாரியம்மாள் ஜாகிர் உசேன் வேலுச்சாமி ஹக்கீம் ஜலில் முரளி ஆகியோர் அமைச்சரின் வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



காரைக்கால் மாவட்டம் தெற்கு தொகுதியில் அமைந்துள்ள தோமாஸ் அருள் திடலில் நேற்று முன்தினம் இரவு சுகந்தி என்பவர் குடிசை வீடு திடீரென விபத்து ஏற்பட்டது. தீ பற்றிய இந்த வீடு முற்றிலும் சேதம் அடைந்த நிலையில் இதை அறிந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாஜிம் சம்பவ இடத்திற்கு உடனடியாக சென்று பார்வையிட்டு வருவாய்த்துறை மூலம் அந்த குடும்பத்திற்கு 20 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை பாதிக்கப்பட்டவருக்கு வழங்கினார். இந்நிகழ்வில் வட்டாட்சியர் மதன்குமார் மற்றும் துறை அதிகாரிகள் முக்கிய பிரமுகர்கள் உடன் இருந்தனர்.



76-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா இலுப்பூர் ஊராட்சி ஹரிஹரன்கூடல் கிராமத்தில் வசித்து வரும் சுதந்திர போராட்ட தியாகி அ.முத்தையன் (வயது-97) இல்லத்திற்கு மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி நேரில் சென்று பொன்னாடை போற்றி சிறப்பு செய்தார். இதில் தரங்கம்பாடி வட்டாட்சியர் சரவணன் உடன் இருந்தார் .



76 ஆவது சுதந்திர தின விழா காரைக்கால் மாவட்டத்தில் இன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு நேற்று காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் கடற்கரை சாலையில் பொதுப்பணித்துறையால் பந்தல் அமைக்கும் பணி மற்றும் பல்வேறு பணிகளை ஆய்வு மேற்கொண்டு அதிகாரிகளுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில் செயற்பொறியாளர் சிதம்பரநாதன் செய்தி மற்றும் விளம்பரத் துறை உதவி இயக்குனர் குலசேகரன் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் உடன் இருந்தனர்.

### சிறுவாபுரி அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில்

# திருக்குளம் சீரமைக்கும் பணி மற்றும் ஆன்மீக நூல் விற்பனை நிலையம் ரூ.3.16 கோடி செலவில் துவக்கி வைக்கப்பட்டது

ஊத்துக்கோட்டை, ஆக15-

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சின்னம்பேடு என்று அழைக்கப்படும் சிறுவாபுரியில் அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோவில்உள்ளது.பிரசித்தி பெற்ற இத்திருக்கோவிலுக்கு செவ்வாய்க்கிழமை, கிருத்திகை,சஷ்டி உள்ளிட்ட விசேஷ நாட்களில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் விடியற்காலை முதல் இரவு வரையில் வந்து நெய் தீபம் ஏற்றி முருகப்பெருமானை பக்தியுடன் வணங்குவர்.

இதனால் பக்தர்களுக்கு வீடு,நிலம், திருமணம்,பிள்ளை பேரு, உத்தியோகம் உள்ளிட்டவை சிறப்பாக அமைவதாக பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது. இந்நிலையில், இக்கோவிலில் உள்ள திருக்குளத்தை ரூ.3.14கோடி செலவில் சீரமைக்கும் பணியை தமிழக அரசின் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு முன்னிலையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று காலை துவக்கி வைத்தார்.

இந்நிலையில்,அதனை வரவேற்கும் வகையிலும்,ரூ.2.30 லட்சம்செலவில்அமைக்கப்பட்ட ஆன்மீக நூல் விற்பனை நிலையத்தை திறந்து வைத்து விற்பனையைதுவக்கிவைக்கும் நிகழ்ச்சியும் என மொத்தம் ரூ.3 கோடியே16 லட்சத்து 30 ஆயிரம் செலவிலான வளர்ச்சிப் பணியை துவக்கி வைக்கும் நிகழ்ச்சி கோவில் வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளுக்கு,இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் ரமணி தலைமை தாங்கினார். சோழவரம் ஒன்றிய திமுக செயலாளர் செல்வசேகரன், ஒன்றிய கவுன்சிலர் சந்துரு, ஊராட்சி மன்ற தலைவர் ஜான்சிராணிராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். அனைவரையும் கோவிலின் செயல் அலுவலர் செந்தில்குமார் வரவேற்றார்.

இதில், சிறப்பு அழைப்பாளர்களாக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே. கோவிந்தராஜன், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர் ஆகியோர் கலந்து கொண்டு ஆன்மீக நூல் விற்பனை நிலையத்தை திறந்து வைத்து விற்பனையை துவக்கி வைத்தனர்.இதன் பின்னர், திருக்குளத்தை சீரமைக்கும் பணியின் பூஜையில் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில்,கோவிலின் தலைமை குருக்கள் ஆனந்தன், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் லட்சுமி நாராயணன்,முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ரமேஷ், முன்னாள் அறங்காவலர் குழு தலைவர் பார்த்தசாரதி, ஒப்பந்ததாரர் விஜயகுமார், மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் இ.ஜெகன் உள்ளிட்ட திமுகவைச் சேர்ந்த மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர்,கிளை கழக நிர்வாகிகளும்,உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளும் திருக்கோவிலின் பணியாளர்களும், ஊழியர்களும்,பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# நீட் தேர்வில் தோல்வி: மகனை தொடர்ந்து தந்தையும் தற்கொலை !

*சென்னை,ஆக,15*

*சென்னை குரோம்பேட்டை அருகே நீட் தேர்வு தோல்வியால் தற்கொலை செய்து கொண்ட மாணவர் ஜெகதீஸ்வரனின் தந்தை செல்வசேகர், தூக்கிட்டு தற்கொலை*



*செய்து கொண்ட சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது!*

*மகனின் சாவுக்கு நீட் தேர்வுதான் காரணம் என பேட்டியளித்திருந்தார். மனைவியை பிரிந்து மகனுடன் வாழ்ந்து வந்துள்ளார்!*

# தமிழ்நாடு அடிமனை பயனாளிகள் குத்தகை விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் சார்பில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரிடம் மனுகொடுக்கும் இயக்கம்

**செம்பனார்கோவில் ஆக-15:**

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவிலிலுள்ள பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகனிடம் தமிழ்நாடு அடிமனை பயனாளிகள் குத்தகை விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மனு அளிக்கும் இயக்கம் திங்களன்று நடைப்பெற்றது.



சங்கத்தின் மாவட்டத்தலைவர் த.ராயர் தலைமையில் நடைப்பெற்ற இயக்கத்தில் மாநில பொருளாளர் எஸ்.துரைராஜ் மாவட்ட செயலாளர் ஏ.ஆர். விஜய் ஆகியோர் சட்டமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை மனுக்களை அளித்தனர். சங்கத்தின் மாவட்ட பொருளாளர் அ.இராமலிங்கம் (இயற்கை விவசாயி), மாவட்டத்துணை செயலாளர் சி.மேகநாதன் உள்ளிட்டோர் கலந்துக்கொண்டனர். புதிய வாடகை நிர்ணயிக்க தலைமைச் செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக்குழுவின் பரிந்துரைகள் வெளிவரும் வரை உயர்த்தப்பட்ட வாடகையை செலுத்த பயனாளிகளை கட்டாயப்படுத்தாதே.

அரசாணை 318-ஐ செயல்படுத்திட உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சட்ட ரீதியானபலதலைமுறைகளாக அடிமனைகளில் வீடுகள், சிறுகடைகள் கட்டி பயன்படுத்தி வருபவர்களை "ஆக்கிரமிப்பாளர்கள்" என்ற பெயரில் வெளியேற்றும் நடவடிக்கைகளை கைவிட வேண்டும். இடத்தை விட்டு காலம் காலமாக கோயில் நிலங்களில் குத்தகை சாகுபடி செய்யும் ஏழை விவசாயிகளை "மறு ஏலம்" என்ற பெயரில் நிலத்தை விட்டு வெளியேற்றும் நடவடிக்கைகளை கைவிட வேண்டும். குத்தகை விவசாயிகளுக்கு ஆர் டி ஆர் பதிவு செய்து தர வேண்டும். அறநிலைய சட்டப்பிரிவு 34ன் படி பல தலைமுறைகளாக குடியிறுப்பவர்கள், சாகுடிபடி செய்யும் விவசாயிகளுக்கு அந்தந்த இடங்களுக்கு நியாயமாக விலையை தீர்மானித்து அவர்களுக்கு சொந்தமாக்கிட வேண்டும்.

அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களுக்கு சொந்தமான கட்டிடங்களில் சிறு ,குறு, கடை வைத்து வணிகம் செய்துவரும் பயனாளிகளுக்கான வாடகை நிர்ணயம் சந்தை மதிப்பீட்டின் படி தீர்மானிக்காமல் அவர்களின் வணிக நிலைமைகளை கணக்கில் கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பூம்புகார் தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த 100 க்கும் மேற்பட்டோர் திரளாக கலந்துக்கொண்டு சட்டமன்ற உறுப்பினரிடம் மனுக்களை அளித்தனர்.

# அதிமுக மதுரை மாநாட்டில் 25 லட்சம் பேர் பங்கேற்பார்கள் அரியலூரில் முன்னாள் அரசு தலைமை கொறடா தாமரை ராஜேந்திரன் தகவல்

*அரியலூர், ஆக.15-*

*அதிமுக சார்பில், மதுரையில் வருகிற 20 ஆம் தேதி நடைபெற உள்ள மாநாட்டில், 25 லட்சம் பேர் பங்கேற்பார்கள் என, அரியலூரில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், முன்னாள் அரசு தலைமை கொறடா தாமரை எஸ். ராஜேந்திரன் கூறியுள்ளார்.*



*மதுரையில் வருகிற 20 ஆம் தேதி நடைபெற உள்ள அதிமுக மாநில மாநாடு தொடர்பாக, அரியலூர் மாவட்ட அதிமுக சார்பில், அரியலூர் ரிதன்யா மஹால் திருமண மண்டபத்தில்நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்துக்கு, கட்சியின் மாவட்ட அவைத் தலைவரும், முன்னாள் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினருமான ராம ஜெயலிங்கம் தலைமை வகித்தார், அரியலூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் பொய்யூர் பாலசுப்பிரமணியன் வரவேற்று பேசினார்.*

*அதிமுக மாவட்ட துணைச்செயலாளர்தங்க பிச்சமுத்து, முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் ஆ.இளவரசன் உள்ளிட்டோர் பேசிய இக்கூட்டத்தில், அதிமுக அரியலூர் மாவட்டச் செயலாளரும், முன்னாள் அரசு தலைமை கொறடாவுமான தாமரை எஸ். ராஜேந்திரன் பேசியதாவது:*

*அதிமுக வீர வரலாற்றின் பொன் விழா எழுச்சி மாநாடு, வருகிற 20 ஆம் தேதி மதுரையில் நடைபெறுகிறது. வருகிற பாராளுமன்ற தேர்தலில் 40 தொகுதிகளிலும் அதிமுக வெற்றி பெறப் போகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்க உள்ள இந்த மதுரை மாநாட்டில், 15 லட்சம் தொண்டர்கள் கலந்து கொள்வார்கள் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதையும் மீறி, 25 லட்சம் பேர் பங்கேற்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. "மதுரை சிறுத்ததோ மாநாடு பெருத்ததோ" எனக் கூறும் அளவுக்கு, கட்சித் தொண்டர்களாகிய நாம் சிறப்பாக செயல்பட வேண்டும்.*

*இவ்வாறு தாமரை ராஜேந்திரன் பேசினார்.*

*அதிமுக மாவட்ட மாணவரணி செயலாளர் ஓபிசங்கர்தீர்மானங்களை படித்த இக்கூட்டத்தில், மாநில எம்ஜிஆர் இளைஞர் அணி துணைச் செயலாளர் அறிவு என்கிற சிவசுப்பிரமணியன், மாவட்ட பொருளாளர் அன்பழகன், மாவட்ட அணி நிர்வாகிகள் சிவசங்கர், ஜீவ அரங்கநாதன், வக்கீல் வெங்கடாஜலபதி, அக்பர் ஷெரீப், ரீடு செல்வம், ஊராட்சி மன்ற தலைவர்கள் தாமரைக் குளம் பிரேம் குமார், கயர்லாபாத் சௌந்தர்ராஜன், ஒன்றிய செயலாளர்கள் செல்வராசு, வடிவழகன், அசோகன், சாமிநாதன், கல்யாணசுந்தரம், வைத்தியநாதன், மருதமுத்து, ராமச்சந்திரன், விக்ரம பாண்டியன், நகர செயலாளர்கள் ஜெயங்கொண்டம் செல்வராஜ், உடையார்பாளையம் அழகேசன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் பாளையங்கரை ராஜேந்திரன், நல்லமுத்து மற்றும், அதிமுகவின் பல்வேறு அணி நிர்வாகிகள், கிளை செயலாளர், உறுப்பினர்கள், தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்,முடிவில் அரியலூர் நகர செயலாளர் ஏபி செந்தில் நன்றி கூறினார்.*

### ஆவுடையார் கோவில் அருகே

# ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் பூச்சொரிதல் விழா

*ஆவுடையார்கோவில், ஆக.15-*

*ஆவுடையார்கோவில் அருகே பாண்டி பத்திரத்தில் முத்துமாரி அம்மன் கோயில் உள்ளது இந்தகோவிலின்பொங்கல் விழாவை முன்னிட்டு முத்துமாரி அம்மனுக்கு பூச்சொரிதல் விழா நடைபெற்றது. பாண்டி பத்திரம் பாலச்சந்திர விநாயகர் ஆலயத்திலிருந்து ஏராளமான பெண்கள் தலையில் பூத்தட்டுகளை சுமந்துகொண்டு பாண்டி பத்திரம் கிராமத்திலுள்ள முக்கிய வீதிகளில் சுற்றி வந்து முத்துமாரி அம்மன் கோவிலை அடைந்துஅங்குபூக்களை முத்துமாரி அம்மனுக்கு செலுத்தி னார்கள்.*



*பின்னர்முத்துமாரி அம்மனை வழிபட்டார்கள் அதனை தொடர்ந்து முத்துமாரி அம்னுக்கு 18ம் தேதி வெள்ளிக்கிழமை லெட்சார்ச்சனை விழாவும் 20ம் தேதி ஞாயிற்றுகிழமை காப்புக் கட்டுதலுடன் திருவிழா தொடங்கி பத்து நாட்கள் நடைபெறும். தினமும் முத்துமாரி அம்மன் வீதி உலா நடைபெறும் தினம்தோறும் மண்டகப் படித்தார்கள் அம்மனுக்கு அபிஷேக நிகழ்ச்சிகள் நடத்திகலைநிகழ்ச்சிகளும் நடத்துகிறார்கள்*



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா கே.ராசியமங்களம் பகுதியில் பெய்த திடீர் கனமழையால் அப்பகுதியைச் சேர்ந்த நல்லதம்பி-சித்ரா ஆகியோரது வீட்டின் சுவர் இடிந்து விழுந்து சேதமடைந்ததைத் தொடர்ந்து தமிழக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் நேரில் சென்று பார்வையிட்டு நிவாரண உதவிகள் வழங்கி ஆறுதல் கூறினார்.

### சங்கரன்கோவில் தெற்கு ஒன்றியம் மற்றும் சங்கரன்கோவில்

# நகர பாக முகவர்கள் கூட்டம் வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ பங்கேற்பு

சங்கரன்கோவில், ஆக.15-

தென்காசி வடக்கு மாவட்ட திமுக சார்பில் சங்கரன்கோவில் மேலரத வீதியில் உள்ள கோகுலம் திருமண மண்டபத்தில் வைத்து சங்கரன்கோவில் தெற்கு ஒன்றியம் மற்றும் சங்கரன்கோவில் நகர பாக முகவர்கள் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு சங்கரன்கோவில் தெற்கு ஒன்றிய செயலாளர் லாலா சங்கர பாண்டியன் தலைமை வகித்தார்.

நகர செயலாளர் பிரகாஷ் வரவேற்றார், மாவட்ட துணை செயலாளர் புனிதா, மாவட்ட பொருளாளர் சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர், இதில் கலந்து கொண்ட தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ வரும் 17ஆம் தேதி முதல்வர் தலைமையில் ராமநாதபுரத்தில் நடைபெறும் பாக முகவர்கள் பயிற்சி பாசறை கூட்டத்தில் அனைவரும் தவறாது கலந்து



கொள்ள வேண்டும் என பேசினார்.

இதில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் உதயகுமார், மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் கேஎஸ்எஸ் மாரியப்பன், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் அப்பாஸ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜ், வெங்கடேஷ் ,அபூபக்கர், ஒன்றிய அவைத்தலைவர் நடராஜன் ,ஒன்றிய துணைத் தலைவர் வைரமுத்து ,கிளைக் கழகச் செயலாளர்கள் ஹைதர் அலி, மூக்கையா, முருகராஜ், தங்கதுரை, வேல்சாமி, தர்மர், சந்திரன் ,மாடசாமி சந்திரசேகர் ,துரைராஜ், கருப்பசாமி, சங்கரன்கோவில் நகர வார்டு செயலாளர்கள் பாட்டத்தூர் ராமலிங்கம், வீரா,ஆறுமுகம்,

காளிசாமிபாண்டியன், பழனிச்சாமி, தடிகாரன், தங்கவேல் ,சரவணன் வெள்ளைத்துரை,சுப்பிரமணி, செந்தில்குமார், சிவா மற்றும் சபரிநாத் மற்றும் சங்கரன்கோவில் தெற்கு ஒன்றியத்தைச் சேர்ந்த 64 பாக முகவர்கள் , சங்கரன்கோவில் நகரத்தை சேர்ந்த 45 பாக முகவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# "படுகொலை மையங்களாக மாறிவரும் நீட் பயிற்சி மையங்கள்" கே.எஸ்.அழகிரி காட்டம்

சென்னை ,ஆக.15-

"தமிழகத்தை பொறுத்தவரை நீட் தேர்வு என்பது பணத்தை வாரி இறைத்து நீட் தேர்வு பயிற்சி மையத்தில் பயின்றவர்கள் தான் வெற்றி பெற முடியும் என்ற அநீதி நிகழ்ந்து வருகிறது. இந்த அநீதியை தடுக்கிற வகையில் நீட் தேர்வு பயிற்சி மையங்கள் செயல்படுவது குறித்து தமிழக அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். நீட் தேர்வு பயிற்சி மையங்கள் படுகொலை மையங்களாக மாறி வருகின்றன" என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் கே.எஸ். அழகிரி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: "தமிழக அரசியல் கட்சிகளில் பாஜகவை தவிர திமுக தலைமையிலான காங்கிரஸ் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தொடர்ந்து நீட் தேர்வை எதிர்த்து போராடி வருகின்றன. சட்டமன்றத்தில் நீட் விலக்கு மசோதா நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பப்பட்டது. ஆளுநர் அதை இழுத்தடித்த பிறகு வேறு வழியின்றி தற்போது குடியரசுத் தலைவருக்கு அனுப்பி உள்ளார். நீட் தேர்வு



குறித்து சமீபத்தில் ஆளுநர் கூறிய கருத்து வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாக உள்ளது. ஆளுநரை விட ஒரு கல் நெஞ்சக்காரர் எவரும் இருக்க முடியாது என்பதற்கு அவரது நச்சுக் கருத்து சான்றாக அமைந்துள்ளது. தமிழக ஆளுநர் தமிழ் சமுதாயத்துக்கே விரோதியாக செயல்பட்டு வருகிறார்.

இந்நிலையில், நீட் தேர்வு பயிற்சி மையத்தில் பயின்று வந்த குரோம்பேட்டையை சேர்ந்த மாணவர் ஜெகதீஸ்வரன் தற்கொலை செய்து கொண்ட அதிர்ச்சி செய்தி மிகுந்த வேதனையை அளித்து வருகிறது. அவரது மரணத்தின் ஈரம் காய்வதற்குள்ளாகவே அவரது தந்தை செல்வசேகரும் தற்கொலை செய்து கொண்டது நம்மை கடும் துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது. நீட் கனவு பொய்த்துப் போன காரணத்தினாலே இத்தகைய தற்கொலைகள் தமிழகத்தில் தொடர் கதையாக நடந்து வருகிறது.

தமிழகத்தை பொறுத்தவரை நீட் தேர்வு என்பது பணத்தை வாரி இறைத்து நீட் தேர்வு பயிற்சி மையத்தில் பயின்றவர்கள்தான் வெற்றி பெற முடியும் என்ற அநீதி நிகழ்ந்து வருகிறது. இந்த அநீதியை தடுக்கிற வகையில் நீட் தேர்வு பயிற்சி மையங்கள் செயல்படுவது குறித்து தமிழக அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். நீட் தேர்வு பயிற்சி மையங்கள் படுகொலை மையங்களாக மாறி வருகின்றன.

எனவே, நீட் தேர்வை எதிர்த்து நமது போராட்டம் ஓயாது. இப்போராட்டத்தின் மூலம் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமுதாய மக்களின் சமூகநீதிப் போராட்டமாகவே அதை நாம் கருத வேண்டும். அந்த வகையில் மறைந்த மாணவர் ஜெகதீஸ்வரன், அவரது தந்தை செல்வசேகர் ஆகியோரின் மறைவு இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அவர் கூறியுள்ளார்.



தென்காசி மாவட்ட எஸ்சி, எஸ்டி பிரிவு மாவட்டத் தலைவர் பி. ராமச்சந்திரன் தமிழ்நாடு இந்திய தேசிய காங்கிரஸ் கமிட்டி சொத்து பாதுகாப்பு குழுவில் நியமித்து மாநில கமிட்டியில் பரிந்துரை செய்த எம்.பி. ரஞ்சன் குமார், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே. எஸ். அழகிரி, தென்காசி மாவட்டத் தலைவர் பி. பழனி நாடார் நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் முதல்வர் பெருந்தலைவர் காமராஜரின் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



தமிழக மக்கள் முன்னேற்றக் கழக தலைவர் ஜான் பாண்டியன், கட்சியின் பொதுச்செயலாளர் வக்கீல் ஜா. பிரிசில்லா பாண்டியன் ஆகியோரின் ஆலோசனைப்படி, மாநில துணைப் பொதுச் செயலாளர் வக்கீல் சண்முகசுதாகர், மதுரை மண்டல செயலாளர் சிறுதூர். அ.சி. கோபாலகிருஷ்ணன் ஆகியோர் புதுடெல்லியில் நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் செய்தி தொடர்பாளர்கள் விஷன் 2047 நிகழ்ச்சியில் பங்கேற்றனர். முன்னதாக தொழில்துறை மத்திய இணை மந்திரி அனுப்பிரியா பட்டேலை சந்தித்து பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர். தொடர்ந்து பா.ஜனதா தலைவர் ஜே.பி. நட்டா, ஸ்ம்ருதிராணி, ரவிசங்கர் பிரசாத், பியூஷ்கோயல்,பூப்பேந்தர் யாதவ், அமித்மால்வியா உள்ளிட்ட மத்திய மந்திரிகளையும், சீராக் பஸ்வான், ஜி. கே. வாசன் உள்ளிட்ட கூட்டணி கட்சித் தலைவர்களையும் மரியாதை நிமித்தமாக சந்தித்தனர்.

### சீர்காழி அருகே குருவை இடுபொருட்கள் வழங்காமல்

# வேளாண்துறை அதிகாரிகள் அலைகழிப்பு, வாக்குவாதம், விவசாயிகள் சாலை மறியல்



சீர்காழி ,ஆக.15-

சீர்காழி அருகே குருவை இடுபொருட்கள் வழங்காமல் வேளாண்துறை அதிகாரிகள் அலைகழிப்பு, வாக்குவாதம், விவசாயிகள் சாலை மறியல் ஈடுபட்டனர். சீர்காழி - நாகப்பட்டினம் தேசிய நெடுஞ்சாலையில் அரைமணி நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்ப்பட்டது.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே தென்னலகுடி கிராமத்தில் இயங்கி வரும் வேளாண்துறை விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கு தமிழக அரசு அறிவித்த இலவச குருவை தொகுப்பு இடுபொருட்களான யூரியா, பொட்டாசியம், டி.ஏ.பி ஆகியவை ஏக்கருக்கு 1 மூட்டை வீதம் வழங்காமல் அதிகாரிகள் அலைகழிப்பு ஆத்திரமடைந்த விவசாயிகள் வேளாண்துறை அதிகாரிகளை முற்றுகையிட்டு வாக்குவாதத்தில் ஈடுப்பட்டனர்.

பின்னர் நாங்கூர், காத்திருப்பு, திருவாலி, தென்னலகுடி உள்ளிட்ட 9 ஊராட்சியை விவசாயிகள் சீர்காழி - நாகப்பட்டினம் தேசிய நெடுஞ்சாலையில் அரை மணி நேரம் சாலை மறியல் ஈடுபட்டனர். தொடர்ந்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டி இடுபொருட்களை முழுமையாக வழங்காமல் குறைத்து வழங்குவதாகவும், கையூட்டாக ஏக்கருக்கு ரூபாய் 300 வேளாண் துறை அதிகாரிகள் வாங்குவதாகவும் விவசாயிகள் குற்றச்சாட்டினர்.

மறியலில் ஈடுப்பட்ட விவசாயிகளிடம் வேளாண்துறை அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியதை அடுத்து விவசாயிகள் கலைந்து சென்றனர்.

# அரிமளம் அருகே கல்லூரி மாணவர்கள் 25 ஆண்டுகள் கழித்து நடத்திய சங்கமம் நிகழ்ச்சி

அரிமளம். ஆக. 15.

அரிமளம் அருகே கல்லூரி மாணவர்கள் 25 ஆண்டுகள் கழித்து நடத்திய சங்கமம் நிகழ்ச்சியில் பழைய நினைவுகளை பகிர்ந்து கொண்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் அருகே உள்ள ராயவரம் கிராமத்தில் பிரபலமான தனியார் பாலிடெக்னிக் கல்லூரி உள்ளது, இங்கு 1995ம் ஆண்டு முதல் 1998 ம் ஆண்டு வரை பயின்ற 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்ற கல்லூரியில் ஒன்று சேர முடிவு செய்தனர். இதற்காக நேற்று சங்கமம் நிகழ்ச்சி ஒன்றினை ஏற்பாடு செய்து நடத்தினர். நிகழ்ச்சிக்கு கல்லூரி செயலர் சுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

கல்லூரி முதல்வர்



சுப்பிரமணியன் முன்னிலை வகித்தார், நிகழ்ச்சியில் பழைய மாணவர்கள் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களுடன் சேர்ந்து கல்லூரி வளாகத்தில் 25 மரக்கன்றுகளை நட்டனர். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற விழாவில் ஒவ்வொரு மாணவர்களும் தங்களது பழைய நினைவுகளை பகிர்ந்து கொண்டனர், மேலும் கல்லூரி வளாகத்தை சுற்றி வந்து பழைய நினைவுகளை அசை போட்டுக்கொண்டு தங்களது கஷ்டங்களை மறந்து மகிழ்ச்சிகளை வெளிப்படுத்தியது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவர்கள் பல்வேறு அரசு, தனியார் பணிகளில் உள்ளது குறிப்பிடத்தக்கது, மேலும் தங்களது குடும்ப சூழ்நிலைகள், குழந்தைகளின் கல்வி எதிர்காலம் குறித்து விவாதித்தனர்.

# உணவு பொருள்களில் கலப்படம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

புதுக்கோட்டை ,ஆக.15-

77-வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு, புதுக்கோட்டை, ஜெ.ஜெ. கலை, அறிவியல் கல்லூரி, வேதியியல் துறை சார்பாக அதன் தத்தெடுப்பு கிராமமாகிய நற்சாந்துபட்டியில், ஸ்ரீ ஷண்முக விலாசா கலாசாலையில் நேற்று "உணவு பொருள்களில் கலப்படம்" என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், வேதியியல் துறைத் தலைவர் முத்துக்குமார் மற்றும் உதவிப் பேராசிரியர் கலைவாணி ஆகியோர் தலைமையில், சுமார் 15 வேதியியல் மாணாக்கர்கள் கலந்து கொண்டு, நாம் அன்றாடம் உபயோகிக்கும் உணவுப் பொருட்களில் எந்தவிதமான கலப்படங்கள் செய்யப்படுகிறது என பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு செய்முறை செய்து, விழிப்புணர்வு ஏற்படுத்தினர். நாம் தினந்தோறும் உபயோகப்படுத்தும் உணவு பொருள்களான, பாலில் தண்ணீர் மற்றும் கிழங்கு மாவும், நெய்யில் வனஸ்பதியும், மிளகில்



பப்பாளி விதையும், தேனில் வெல்லப்பாகும், மிளகாய்ப்பொடியில் செங்கல் தூளும் கலக்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாது, நம் உடலுக்கு மிகவும் நன்மை தரக்கூடிய பொருளான மஞ்சளில், பல ரசாயனங்களை கலந்து, முதல் தர மஞ்சளாக காட்சியளிக்க செய்து, விற்பனை ஆகிறது. அதுபோல குழந்தைகள் உண்ணும் தின்பண்டங்களில் சுவைக்காகவும், கவர்ச்சிக்காகவும் பல ரசாயன பொருட்களும், மெழுகும் கலக்கப்படுகின்றன. இதனால் குழந்தைகள் வயிற்று வலி மற்றும் பல உபாதைகளுக்கு உள்ளாகின்றனர்.

இதனை செய்முறை மூலம் உணர்த்தி, இனிமேல் இதுபோல் தின்பண்டங்களை வாங்கி சாப்பிடக்கூடாது எனவும், மாலை வேலைகளில் பசிக்கும் பொழுது சுண்டல், வேர்க்கடலை, கடலை மிட்டாய், எள்ளு மிட்டாய், பழங்கள் மற்றும் உலர்பழங்களை சாப்பிட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி மூலம் 150-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பயனடைந்தனர். இந்நிகழ்ச்சிக்கு, நற்சாந்துபட்டி ஊராட்சி மன்றத் தலைவர் சிதம்பரம் செட்டியார் தலைமை வகித்தார். அடைக்கம்மை ஆச்சி அறக்கட்டளைத் தலைவர் சாத்தப்பன் செட்டியார் வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் முன்னதாக, பள்ளி தலைமை ஆசிரியை தையல்நாயகி வரவேற்புரையும், ஆசிரியை பரிபூரணம் நன்றி உரையும் கூறினார்.


# விராலிமலையில் சுப்புராம் அறக்கட்டளை சார்பாக நலத்திட்ட உதவி வழங்கும் விழா

*விராலிமலை,ஆக.15-*

*விராலிமலை சாலை விபத்தில் பலியான அமரர் சுப்புராமின் ஆறாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சுப்புராம் அறக்கட்டளை சார்பாக நலத்திட்ட உதவி வழங்கும் விழா ஜெகநாதன் மகாலட்சுமி தலைமையில் நடைபெற்றது*

*முன்னதாக வருகை தந்த அனைவரையும் அமுதா ராமகிருஷ்ணன் வரவேற்றார் விராலிமலை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ஜெயந்தி முன்னிலை வகித்தார், விராலிமலை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பாலகிருஷ்ணன், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் கோபால், புனித தெரசா உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் சகாயராணி சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.*

*சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்கத் தலைவர் மாருதி கண.மோகன் ராஜா, சென்னை எழுத்தாளர் மஞ்சுளா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு பரிசளித்து சிறப்புரையாற்றினார்கள் நிகழ்ச்சியில் மரம் அறக்கட்டளை நிறுவனர் மரம் ராஜா, உடற்கல்வி ஆசிரியர் முத்துராமலிங்கம்,*



*உடற்கல்வி இயக்குனர் கந்தசாமி, ஓயாத அலைகள் அறக்கட்டளை கண்ணன், ஸ்பீடு தொண்டு நிறுவனம் கூட்டமைப்புராஜ்குமார், இளம் பத்திரிகையாளர் இயல் கண்ணன் ஆகிய சாதனையாளர்களை பாராட்டி விருது வழங்கப்பட்டது .*

*மேலும் ஏழை எளிய, மாற்றுத்திறனாளிகள், கணவரால் கைவிடப்பட்ட கைம்பெண்கள், ஆதரவற்றவர்கள், ஆண்கள் பெண்களுக்கு வேட்டி சேலை இலவசமாக வழங்கப்பட்டது, பள்ளி மாணவ மாணவியர்கள் 10, 12 ஆம் வகுப்பு தேர்ச்சி முதலிடம் பிடித்தவர்கள் கௌரவிக்கப்பட்டு சான்றிதழ்கள் மெடல்கள், திருக்குறள் புத்தகம் பரிசு வழங்கப்பட்டது 1ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு மாணவ மாணவியருக்கு கவிதை, கட்டுரை, ஓவியம், பேச்சு போட்டிகள் பள்ளிகளில் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ் மெடல் வழங்கப்பட்டது சுப்ராம் நினைவு அறக்கட்டளையில் ஆரி, ஒர்க் தையல் பயிற்சி, கலை போன்ற சுய வேலை பயிற்சிகள் அளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது சுப்புராஜ் நினைவு அறக்கட்டளையில் ஒவ்வொரு ஆண்டும் மகளிருக்கு பயிற்சி கொடுத்து அவர்களின் தனித்திறமைளை மேம்படுத்தி அவர்கள் வாழ்க்கையில் சிறப்பாக வாழ உறுதுணையாக உள்ளது மேலும் பயிற்சி பெற்ற உறுப்பினர்களின் கைவினைப்பொருட்கள் அலங்கார குடங்கள் தோரணங்கள் மற்றும் காதுக்கு ஜிமிக்கி, கைக்கு வலையல்கள், பாசி போன்றவைகள் கண்காட்சிபொருட்களாக வைக்கப்பட்டது நிகழ்ச்சியில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்க மகளிர் அணி நிர்வாகிகள் ஜான்சி ராணி சங்கர், மல்லிகா ஆகியோர் கலந்து கொண்டனர்*

# ஆவுடையார்கோவில் அருகே திருப்புனவாசலில் அரசு உதவி பெறும் பள்ளியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு


*ஆவுடையார்கோவில், ஆக.15-*

*புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் அருகே திருப்புனவாசலில் ஸ்ரீ ராமகிருஷ்ணா விவேகானந்தா மேல்நிலை அரசு உதவி பெறும் பள்ளியில் 800-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர்.*

*இந்த பள்ளியில் பயின்ற 96 வசந்த கால பறவைகள், 97 துள்ளித்திரிந்த காலம்,2000 நண்பர்கள், 2001 நண்பர்கள், 2006 நண்பர்கள் குழு உள்ளிட்ட 5 குழுவைச் சேர்ந்த முன்னாள் மாணவ மாணவியர்கள் சார்பில் சந்திப்பு விழா, பணி ஓய்வு பெரும் ஆசிரியர் சுப்பிரமணியனுக்கு பாராட்டு விழா முன்னாள் ஆசிரியர்களை கௌரவிக்கும் விழா உள்ளிட்ட முப்பெரும் விழா நடைபெற்றது.*

*விழாவில் இந்த பள்ளியில் படித்த முன்னாள் மாணவ, மாணவிகள் தற்போது ஆசிரியர் மருத்துவர் பொறியாளர் வல்லுநர்கள் வருவாய்துறை அலுவலர்கள் வங்கி மேலாளர்கள் அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பணியாற்றி வருபவர்களும் மாணவர்கள் காலத்தில் அவர்களுக்கு ஆசிரியராக பயின்றவர்களும் வந்திருந்தனர்.*

*அவர்கள் இந்த பள்ளியில் படிக்கும்போது*



*நடந்த பழையகால சுவாரசியமான நிகழ்வுகளை பகிர்ந்து கொண்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள், அவர்கள் படிக்கும் பொழுது அவர்களுடைய முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்பெருமக்களை அழைத்து சிறப்பு செய்து வாழ்த்து பெற்றனர்.*

*அந்த பள்ளியில் நீண்டலமாக சிறப்பாக பணியாற்றி பணி ஓய்வு பெறுகின்ற ஆசான் ஆசிரியர் எம்.சுப்பிரமணியன் அவர்களை அழைத்து அவருக்கு பொன்னாடை போர்த்தியும் சந்தனமாலை அணிவித்தும் பணி நிறைவு பாராட்டு விழா நடத்தினர்.*

*மேலும் அவருக்கு 3 பவுன் மதிப்புள்ள தங்க மோதிரம் மற்றும் வெள்ளிக்காப்பு பரிசாக வழங்கினார்கள்*

*அதனை தொடர்ந்து அப்பள்ளியில் படித்த அனைத்து குழுவைச் சேர்ந்த மாணவ,மாணவியர்கள் ஒன்று கூடி தங்கள் முன்னாள் ஆசிரியரோடு புகைப்படம் மற்றும் செல்பி எடுத்துக் கொண்டார்கள், முன்னாள் மாணவர்கள் ஒருவருக்கொருவர் உணவு ஊட்டி அன்பை வெளிப்படுத்தி கொண்டனர்.*

*பல்வேறு துறைகளில் பணிபுரியும் முன்னாள் மாணவர்கள் ஒன்றுசேர்ந்து முப்பெரும் விழாவை கொண்டாடியதை பார்த்தவர்கள் மகிழ்ச்சியோடு திரும்பி சென்றார்கள்*

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

# 'நீட்' அநீதிக்கு எதிரான போராட்டக் களத்தில் பெற்றோரும் மாணவர்களும் கைகோக்க வேண்டும் மார்க்சிஸ்ட்



சென்னை , ஆக. 15–

"மாணவி அனிதா முதல் மாணவர் ஜெகதீஸ்வரன் மற்றும் அவருடைய தந்தையின் தற்கொலை வரை அனைத்து துயரங்களுக்கும் காரணம் நீட் திணிப்பு மட்டுமே ஆகும். ஆனால், நீட் தேர்வின் கொடுமையை தற்கொலைகளால் முடிவுக்கு கொண்டுவர முடியாது" என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: "நீட் தேர்வு திணிக்கப்பட்டதன் கொடூர விளைவாக, சென்னை குரோம்பேட்டையில் வசித்து வரும் ஜெகதீஸ்வரன் என்ற மாணவரும், அவருடைய தந்தையும் தற்கொலை செய்துகொண்ட அதிர்ச்சி அளிக்கும் செய்தி வந்துள்ளது. இதுபோன்ற தற்கொலைகள் பிரச்சினைக்குதீர்வில்லை, போராட்டங்களை வலுப்படுத்துவதே அவசியம் என்ற போதிலும், நீட் தேர்வை தொடர்ந்துதிணித்துவரும் ஒன்றிய பாஜகவும் அதன் கருவியாகச் செயல்படும் ஆளுநர் ஆர்.என்.ரவியுமே இந்த மரணங்களுக்கு முழு முதல் காரணம் ஆகும். இத்தனைக்கு பிறகும் தமிழகத்தைத் தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய அரசின் போக்குக்கு சிபிஐ(எம்) மாநில செயற்குழு தனது வன்மையான கண்டனத்தை தெரிவிக்கிறது.

ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய தமிழகத்தைச் சேர்ந்த பெற்றோர் ஆளுநரிடம் நேரடியாகவே நீட் திணிப்பின் துயரங்களை முன்வைத்தனர். ஆனால், அவர்களின் நடைமுறை அனுபவத்தை முழுமையாக பேச விடாமல் மைக்கைப் பிடுங்கியதுடன் 'நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்கவே மாட்டேன்' என்று அராஜகமான உடல் மொழியுடன் உதாசீனம் செய்து பேசினார் ஆளுநர் ஆர்.என்.ரவி. நீட் தேர்வின் காரணமாக நடக்கும் மாணவர் தற்கொலைகளை மலினப்படுத்தி, எதிர்க்கட்சிகள் காசு கொடுத்து இப்பிரச்சினையை பெரிதாக்குவதாகவும் பேசினார். அரசமைப்புச் சட்டத்திற்கு நேர் விரோதமான, ஆர்எஸ்எஸ் கொள்கையின் வெளிப்பாடான இந்தப் பேச்சு பரவலான கண்டனத்துக் குள்ளானது.

நீட் தேர்வை புகுத்திவிட்டால் ஊழல் முறைகேடுகள் தடுக்கப்படும், கல்வியின் தரம் உயரும் என்றுதான் அதனை ஆதரிப்போர் வாதங்களை வைக்கிறார்கள். மாணவர் ஜெகதீஸ்வரன் தற்கொலை செய்தியோ உண்மைக்கு நேர் மாறாக இருப்பதைக் காட்டுகிறது. அவரோடு படித்து, அவரை விடவும் குறைவான மதிப்பெண் பெற்ற மாணவர்கள் பணம்கொடுத்து தனியார் மருத்துவக் கல்லூரியில் இடம் பிடித்துள்ளனர். ஏழ்மை நிலையில் உள்ள மாணவர்களின் மருத்துவ கனவு நிராசையாகிறது.

நீட் பயிற்சி மையங்களும் ஒவ்வொரு ஆண்டும் கட்டணக் கொள்ளை மூலம் ஆயிரக்கணக்கான மாணவர்களையும், அவர்களது குடும்பங்களையும் சுரண்டுகிறார்கள். பல ஆண்டுகள் நுழைவுத்தேர்வுக்காக செலவிடுவதால் ஏற்படும் அழுத்தமும், மாணவர்களிடையே உருவாகும் பாகுபாடும், கட்டணக்கொள்ளையின் அதிகரிப்பும் நீட் தேர்வின் நேரடி விளைவுகளாகும். மேலும், இதனால் தமிழகத்தின் மருத்துவக் கட்டமைப்பின் அடித்தளமே சிதைக்கப்படும் ஆபத்தும் உள்ளது.

இதுபோன்ற நிலைமைகள் ஏற்படும் என்பதால்தான் தமிழகத்தின் சட்டமன்றம் இந்தப் பிரச்சினையில் நீண்ட விவாதம் நடத்தி, நீட் விலக்கு மசோதாவை நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பியது. ஆனால் தன்னுடைய அதிகார வரம்பிலேயே வராத ஒரு சட்டத்தை பல மாதங்கள் கிடப்பில் போட்டு வைத்த ஆளுநர் ஆர்.என்.ரவி குடியரசுத் தலைவருக்கு அனுப்புவதற்கே தாமதப்படுத்தினார். இப்போது வரையிலும் உண்மைக்கு மாறான தகவல்களைச் சொல்லி தமிழக மக்களை திசை திருப்பப் பார்க்கிறார். ஒன்றிய பாஜக ஆட்சியும், ஆர் எஸ் எஸ ¬ ம் அவரை ஆதரித்து வழிநடத்துகின்றன. இப்போக்கினை சிபிஐ(எம்) மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

மாணவி அனிதா முதல் மாணவர் ஜெகதீஸ்வரன் மற்றும் அவருடைய தந்தையின் தற்கொலை வரை அனைத்து துயரங்களுக்கும் காரணம் நீட் திணிப்பு மட்டுமே ஆகும். ஆனால், நீட் தேர்வின் கொடுமையை தற்கொலைகளால் முடிவுக்கு கொண்டுவர முடியாது. சிபிஐ(எம்) உள்ளிட்ட கட்சிகளும், தமிழக அரசாங்கமும் நீட் திணிப்புக்கு எதிராக விடாப்பிடியான போராட்டத்தை நடத்தி வருகின்றன. பெற்றோரும், மாணவர்களும் இந்த அநீதிக்கு எதிரான போராட்டக் களத்தில் கைகோக்க வேண்டும், மனம் தளர்ந்து வேதனையான முடிவுகளுக்கு செல்லக் கூடாது என சிபிஐ(எம்) சார்பில் வேண்டுகோள் விடுக்கிறோம்.

ஒன்றிய அரசாங்கம், இனியாவது இப்பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்து நீட் திணிப்புக் கொள்கையை மாற்றிக்கொள்வதுடன், குடியரசுத் தலைவர் உடனடியாக நீட் தேர்வு விலக்கு மசோதாவுக்கு ஒப்புதல் வழங்கிட வேண்டுமென சிபிஐ(எம்) மாநில செயற்குழு வலியுறுத்துகிறது" என்று அவர் கூறியுள்ளார்.





22 வது ஜூனியர் அகில இந்திய வூசு போட்டி பாடலிபுத்ரா ஸ்போர்ட்ஸ் காம்ப்ளக்ஸ் இண்டூர் ஸ்டேடியம் பாட்னா (பீகார்) மாநிலத்தில் ஆகஸ்ட் மாதம் 6ம் தேதி முதல் 11 தேதி வரை நடைபெற்றது .இதில் சென்னை மாவட்டத்தை சேர்ந்த வி. தருண்ராஜ் தேசிய அளவில் பங்கு கொண்டு தங்கப்பதக்கம் ஒன்றும் ,வெள்ளி ஒன்றும் மேலும் வெண்கல பதக்கம் ஒன்றும் வென்று தமிழ்நாட்டிற்கும் சென்னை மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். தமிழ்நாடு வூசு சங்க தலைவர் அலெக்ஸ் அப்பாவு, தமிழ்நாடு வூசு சங்க செயலாளர் ஜான்சன்,சென்னை மாவட்ட வூசு சங்க கௌரவத் தலைவர் மனோர பூபதி, சென்னை மாவட்ட வூசு சங்க தலைவர் புல்கானி,சென்னை மாவட்ட வூசு சங்க செயலாளர் பி. விசாகபதி ,சென்னை மாவட்ட வூசு சங்க பொருளாளர் ஜெயச்சந்திரன், புதுகை வரலாறு சென்னை பதிப்பின் தலைமை செய்தி ஆசிரியர் சு.காதர், சென்னை மாவட்ட வூசு சங்க துணைத் தலைவர் ஆலய குமார்,சென்னை மாவட்ட வூசு சங்கத் தொழில்நுட்ப இயக்குனர் தண்டபாணி,ஸ்ரீ சாரதா தேவி மெட்ரிகுலேஷன் பள்ளியின் தாளாளர் சரவணன், நேதாஜி சமூக சேவை இயக்கத்தின் தலைவர் டாக்டர் ஜெ.சரத் மற்றும் செயலாளர் வன்னிய ராஜன்,உள்ளாட்சி பத்திரிக்கை நிருபர் கோடீஸ்வரன், உண்மை செய்தி பத்திரிக்கை ஆசிரியர் தர்மராஜன், சமூக ஆர்வலர்கள் பிரதீப் குமார், ருக்மாங்கதன், ராமலிங்கம், வரதராஜன், ஆகியோர் பாராட்டி வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

# சட்டப்பேரவையில் நடைபெற்ற நாகரிகமற்ற செயலை நாடகம் என்பதா? ஓபிஎஸ் கண்டனம்



சென்னை, ஆக. 15–

1989 ஆண்டு அன்று தமிழக சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற நாகரிகமற்ற செயலை நாடகம் என்று சொல்வது முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பதற்கு சமம் என ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

இது குறித்து நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "தமிழக சட்டமன்றப் பேரவையில் ஜெயலலிதா அவமதிக்கப்பட்டதை 'நாடகம்' என்று சொல்லும் தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலினுக்கு கடும் கண்டனம் என்றும்

மத்திய அரசின் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசிய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீத்தாரமன், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி, மகாபாரதத்தில் திரௌபதிக்கு இழைக்கப்பட்ட அநீதியை பற்றி பேசியதை சுட்டிக்காட்டி, பெண்கள் எங்கு இழிவு படுத்தப்பட்டாலும் அதனை கடுமையாக ஒடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இதில் அரசியல் இருக்கக்கூடாது என்றும் தெரிவித்தார்.

மேலும், கனிமொழிக்கும், நாடாளுமன்றத்திற்கும் 25-03-1989 அன்று தமிழக சட்டமன்றப் பேரவையில் நடந்த ஒரே ஒரு நிகழ்வை நினைவு படுத்துவதாகத் தெரிவித்து, அந்த புனிதமான சபையில் முதல் பெண் எதிர்க்கட்சித் தலைவரான ஜெயலலிதா தி.மு.க.வினரால் அவமானப் படுத்தப்பட்டதையும், அவருடைய புடவை இழுக்கப்பட்டதையும், தமிழக சட்டமன்றப் பேரவைக்கு வந்தால் முதல்வராகத்தான் திரும்ப வருவேன் என்று ஜெயலலிதா சபதம் எடுத்ததையும், இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு முதல்வராக பொறுப்பேற்றதையும் குறிப்பிட்டார்.

இது உண்மையிலே நடைபெற்ற சம்பவம். ஆனால், இந்தச் சம்பவம் நாடகம் என்று தி.மு.க. உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் கூறினர். இது குறித்து ஒரு நாளிதழுக்கு பேட்டியளித்த தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், இதுபோன்ற நிகழ்வு தமிழக சட்டமன்றப் பேரவையில் நிகழவில்லை என்றும், அன்று சட்டமன்றத்தில் இருந்தவர்களுக்கு இது ஒரு நாடகம் என்பது தெரியும் என்றும் பேட்டியளித்து இருக்கிறார். நடந்த சம்பவத்தை, நடந்த உண்மையை திரித்துப் பேசுவது கடும் கண்டனத்திற்குரியது.

இது குறித்து 25-03-1992 அன்று தமிழக சட்டமன்றப் பேரவையில் பேசிய ஜெயலலிதா, "இது கருப்பு தினம் மட்டுமல்ல, வன்முறையால் அரசியலில் எதையும் சாதித்து விட முடியும் என்று தப்புக் கணக்கு போடுகிறவர்களுக்கு பாடமாக அமையும் தினம்" என்று குறிப்பிட்டார். தி.மு.க.வின் இதுபோன்ற ஜனநாயக விரோதச் செயல்களையெல்லாம் மனதில் வைத்துதான் 1991ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் மக்கள் 'சாட்டை அடி', 'சம்மட்டி அடி' கொடுத்தார்கள் என்பதை தி.மு.க. தலைவருக்கு நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இது மட்டுமல்லாமல், 25-03-1989ம் நாளைய நடவடிக்கைக் குறிப்புகளிலுள்ள செய்திகள் குறித்து 26-03-1992 அன்று அப்போதைய பேரவைத் தலைவர், தீர்ப்பு வழங்கியிருப்பதையும், அவை நடவடிக்கைக் குறிப்புகள் என அன்றைய தினம் 25-03-1989 அன்று நடந்ததாக வெளியிடப்பட்டுள்ள இக்குறிப்புகள் அனைத்தும் நாடாளுமன்ற மரபுகள் மற்றும் நடைமுறைகளுக்கு முற்றிலும் விரோதமானவை; தீய நோக்கத்தோடும் திட்டமிட்டு சிலவற்றை மறைப்பதற்காகவும் செய்யப்பட்ட இடைச்செருகல் வேலை; மோசடி என்று தீர்ப்பளித்திருப்பதையும் தி.மு.க. தலைவருக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

25-03-1989 அன்று தமிழக சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற நிகழ்வுகளை நன்கு கண்ணுற்றும் அதனை 'நாடகம்' என்று சொல்வதுதான் 'நாடகம்'. 25-03-1989 அன்று தமிழக சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற நாகரிகமற்ற செயலை 'நாடகம்' என்று சொல்வது முழுப் பூசணிக் காயை சோற்றில் மறைப்பதற்கு சமம். அன்று நடந்தது உண்மை என்பதை மக்கள் அடுத்து வந்த சட்டமன்றப் பொதுத் தேர்தலில் உணர்த்தி விட்டார்கள் என்பதை தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலினுக்கு நினைவூட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். ஒருவேளை உண்மையை 'நாடகம்' என்று சொல்வதுதான் திராவிட மாடல் போலும்!" என்று ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

# சிறுவாபுரி அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் திருக்குளம் சீரமைக்கும் பணி மற்றும் ஆன்மீக நூல் விற்பனை நிலையம் ரூ.3.16 கோடி செலவில் துவக்கி வைக்கப்பட்டது

ஊத்துக்கோட்டை, ஆக15–

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சின்னம்பேடு என்று அழைக்கப்படும் சிறுவாபுரியில் அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோவில் உள்ளது.

பிரசித்தி பெற்ற இத்திருக்கோவிலுக்கு செவ்வாய்க்கிழமை, கிருத்திகை, சஷ்டி உள்ளிட்ட விசேஷ நாட்களில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் விடியற்காலை முதல் இரவு வரையில் வந்து நெய் தீபம் ஏற்றி முருகப்பெருமானை பக்தியுடன் வணங்குவர். இதனால் பக்தர்களுக்கு வீடு,நிலம், திருமணம், பிள்ளை பேரு, உத்தியோகம் உள்ளிட்டவை சிறப்பாக அமைவதாக பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது.

இந்நிலையில், இக்கோவிலில் உள்ள திருக்குளத்தை ரூ.3.14கோடி செலவில் சீரமைக்கும் பணியை தமிழக அரசின் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு முன்னிலையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று காலை துவக்கி வைத்தார்.





இந்நிலையில்,அதனை வரவேற்கும் வகையிலும்,ரூ.2.30 லட்சம் செலவில் அமைக்கப்பட்ட ஆன்மீக நூல் விற்பனை நிலையத்தை திறந்து வைத்து விற்பனையை துவக்கி வைக்கும் நிகழ்ச்சியும் என மொத்தம் ரூ.3 கோடியே16 லட்சத்து 30 ஆயிரம் செலவிலான வளர்ச்சிப் பணியை துவக்கி வைக்கும் நிகழ்ச்சி கோவில் வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகளுக்கு, இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் ரமணி தலைமை தாங்கினார். சோழவரம் ஒன்றிய திமுக செயலாளர் செல்வசேகரன், ஒன்றிய கவுன்சிலர் சந்துரு, ஊராட்சி மன்ற தலைவர் ஜான்சிராணி ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். அனைவரையும் கோவிலின் செயல் அலுவலர் செந்தில்குமார் வரவேற்றார்.இதில்,சிறப்பு அழைப்பாளர்களாக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே.கோவிந்தராஜன், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர் ஆகியோர் கலந்து கொண்டு ஆன்மீக நூல் விற்பனை நிலையத்தை திறந்து வைத்து விற்பனையை துவக்கி வைத்தனர்.

இதன் பின்னர்,திருக்குளத்தை சீரமைக்கும் பணியின் பூஜையில் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில், கோவிலின் தலைமை குருக்கள் ஆனந்தன், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் லட்சுமி நாராயணன்,முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ரமேஷ், முன்னாள் அறங்காவலர் குழு தலைவர் பார்த்தசாரதி, ஒப்பந்ததாரர் விஜயகுமார், மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் இ.ஜெகன் உள்ளிட்ட திமுகவைச் சேர்ந்த மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகளும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளும் திருக்கோவிலின் பணியாளர்களும், ஊழியர்களும், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.





# நீட் தேர்வால் மகன், தந்தை பலி எதிரொலி ஜனாதிபதிக்கு முதல்வர் கடிதம்

# திமுக அளித்தது பொய் வாக்குறுதி நீட் தேர்வை வைத்து விளையாடாதீர்கள்





# நீட் தேர்வுக்கு தமிழகத்தில் வலுக்கும் எதிர்ப்பு கவர்னரின் தேநீர் விருந்தும் புறக்கணிப்பு


| சென்னை / புதுக்கோட்டை | 15.08.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

15.08.2023 செவ்வாய்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

அரவிந்தர் , இந்திய குரு, மெய்யியலாளர் (பி.1872) (இ.1950)



வ. சு. செங்கல்வராய பிள்ளை , தமிழறிஞர் (பி.1883) (இ.1971)



தி. வை. சதாசிவ பண்டாரத்தார் , தமிழ் வரலாற்றாளர் (பி.1892) (இ.1960 )



வி. கல்யாணம் , இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி.1922) (இ.2021)



குஷபாவு தாக்கரே , இந்திய அரசியல்வாதி (பி.1922) (இ.2003)



சுவாமி தயானந்த சரசுவதி , தமிழக மரபுவழி அத்வைத வேதாந்த ஆசிரியர் (பி.1930) (இ.2015)



விஜய் பரத்வாஜ் , இந்தியத் துடுப்பாளர் (பி.1975)



## இந்தியாவின் விடுதலை நாள் (சுதந்திர தினம்)